உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# செங் கமலம்

ஓர் அற்புத கேவுளி நூல்



இஃது


தென்னாற்காடு ஜில்லா—கள்ளக்குறிச்சித் தாலுக்கா

சின்ன சேலம்

மிராசுதாரரும் - பழந் தமிழ்நூல் ஆராய்ச்சிப் பிரியருமான

**S. துரைசாமிப் பிள்ளை**


இயற்றியது.


முதல் பதிப்பு—2000 பிரதிகள்.


*All rights Reserved.*] 1925 [விலை அணா **12.**

இந்நூலைப் பார்த்துப் பலன் தெரியும் விதம் 3-ம் பக்கத்திலுள்ள "நூன்முகம்" என்ற தலைப்பின் கீழ் விளக்கமாய் எழுதி யிருப்பதால், அஃதை நன்றாய்ப் படித்துப் பார்த்து, பிறகு உ[illegible]யில் பிரவேசிப் பீர்களாக!

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேலம் முனிசிபல காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ரா. திம்மப்ப ஐயர் விரும்பியளித்த

# சிறப்புப்பாயிரம்.

உலகியல்வழி, வேதநெறியாகிய இவ்விரண்டனையுங் கற்றுணர்ந்து கேட்டறிந்தார்க்கே வீட்டுநெறியுஞ் சித்த சுத்தியும் சிவத்தை யறிதலு மொருங்கே கைகூடுமென்பர் பெரியோர். முற்குறித்த இரண்டனுள் நூனெறி யானன்றி இயல்பாயே உலகியலை யெளிதிலறியலாம். பிற்குறித்த வேத நெறியோவெனின், முற்பிறப்பின் தவமின்றி யெளிதிற் கிடைத்தற் கரிய தொன்றாம். அது, கற்றுவல்ல சான்றோரை யண்மிப் பல்காலும் வழிபட்டு வணங்கிப் பயில நாளடைவில் கைவரும் பான்மையதாம். மற்றும் அதன் உபாங்கங்களாகிய சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம், சிக்ஷை, வியாகரணம் என்பனவற்றை முறையின் உணர்ந்தார்க்கே வேதப்பொருள் நன்கு புலனும். இவ்வாறனுளொன்று சோதிட நூலெனின் மற்றிதன் பெருமையை யளக்கவு முடியுமோ? நம்மவருட் பெரும்பாலார்க்குச் [illegible] நூலிற் றிடமான நம் பிக்கை யேற்படாதிருப்பதை யவரவர் [illegible]ளைவைக் கொண்டு பன்முறையு நாங்கேட்டிருக்கலாம். ஆயினவ்வையம் அவர்தஞ் சிற்றறிவின் சார்பாகக் கிளர்ந்ததேயன்றி வேறன்றாம். ஓராண்டிலேற்படுங் கிரகணச் செய்திகளைப் பல மாத[illegible]து முன்னர்த் திட்டமாய்க் கணித்தறிந்து புலப்படுத்தும் மெய்ம்மையி விருந்தே இந்நூலினுண்மையை நாம் உலகிற்குத் தெளிவுறுத்த லாம். கணநேரம் பிழையினுங் கணித முழுதும் பிசகுமன்றோ! அவரவர் ஜாதகக் குறிப்புக்களின் பலன்கள் பலித்தல், பலியாமைகட்குக் காரணம் அவ்வவற்றின் முதலிற் குறிக்கப்பட்ட நேரத்தின் நேர்மை, திரிபு ஆதியவற் றின் பாற்படும். இங்ஙனமிருக்க, இயற்கையிலோர் பிழையுமின்றி மெய்ந் நூலாயிருக்குஞ் சோதிடத்தைப் பொய்யென்பார் தம் அறிவுதானென்னே? அந்தோ, அவர்தம் மடமைதா னிருந்தவா றென்னே! நிற்க, கௌளி சாஸ்திர மென்பதும் அத்தகையதேயாம். சேங்கமலம்(ம்) மெனப் பெய ரிய இந்நூலை வசனமாக இயற்றியவர், எமது ஒருசாலை மாணவரும், சேலம் முனிசிபல் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த எமது இயற் றமிழாசிரியர் ஸ்ரீமான் திரு. சுந்தர நடராஜ ஐயரவர்களிடம் எம்மோ டொருங்கே தமிழ் பயின்றவரும், சோதிடநூலில் நிகரற்ற பெரும் புலமை வாய்ந்தவரும், நற்குணக் களஞ்சியமும், சின்னசேலம் என்ற ஊரில்

மிராசுதாரராய் இருபெருஞ் செல்வத்தொரு பெருங் குரிசிலாய் வாழ்ந்து வருபவரும் ஆகிய ஸ்ரீமான் எஸ். துரைசாமிப்பிள்ளை யவர்கள். இவர் இந் நூலைத் தமது ஆங்கில நூலாராய்ச்சியின் வன்மையைக் கொண்டும் பிறபாஷைகளிலுள்ள சோதிடச் சார்பான விஷயங்களைக் கொண்டும் பல செய்திகளை நுனித்துணர்ந்து ஆராய்பவர்க்கு எளிதிற் பல விடயங்களும் விளங்கும் வகையாக அமைத்திருக்கின்றார்கள். விடயங்களை நன்காராய்ந்து தெளிந்திருப்போர் இத்தகைய நூலைத் திருத்தமாக வெளியிடுதலியற்கையேயாம். யாழ்ப்பாணத்திலொரு புலவர் இவ்விடயமாகச் செய்யுளாகப்பாடிய நூலே இது வெளிவந்ததற்கு மிக்க துணையாயிருந்தது. எனினும் அந்நூலில் எளிதில் விளங்காத பல விடயங்களைக் குறிப்புரை யென்ற தலைப்பின் கீழ் இவ்வாசிரியர் விளக்கியிருப்பது இதனைப் படிப்போர்க்குப் பெரிதும் துணை புரிவதாயுள்ளது. இத்தகைய நூல் கணிதமுறையுடன் வெளிவந்திருப்பது நம் தமிழ்மக்களின் நற்பயனேயாம். இவ்வாசிரியர் இன்னும் பல சோதிட நூல்களை விளக்கமாக எழுதியிருக்கின்றனர். அவற்றையும் விரைவில் வெளியிட்டு உலகுக்குபகரிப்பாரென எதிர் பார்க்கின்றேம். இதனை யிவ்வாசிரியர் தமது கல்விக்குப்பெருந் துணைவாயிருந்த தமது செல்வத் தந்தையார் சேங்கமலம் பிள்ளையவர்கள் இணையடிகட்குரிமையாக்கியிருப்பது அவர்தம் பிதிர்பக்தியைத் தெளிவாகக் காட்டுகின்றது. இஃதன்றே மக்கள்தம் நன்றியறிவின் மாண்பாகும். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றபடி தமக்குக் கல்வி பயில்வித்த தமது தந்தையார்க்கே இதனை உரிமையாக்கியிருப்பது பெரிதும் பாராட்டற்பாலதாம். எல்லாம்வல்ல நம் குமரப்பெருமான் நலன்கள் பலவு மின்னவர்க் கருள்வாராக !

சண்முகவிலாசம்,
20—3—1925.

---

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

நேரிசை வெண்பா.

சீரார்ந்த செந்தமிழிற் சேங்,கமல(ம்) மென்னுமொரு
பேரார் கௌளிநூல் பேசினன்—நேரார்ந்த
சோதிட நூல்வல்ல துரைசாமிப் பிள்ளையிந்த
மேதினியில் ஏற்ற மிகவே.

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதி,
31—3—25,
சென்னை.

ஆத்தூர் அஸிஸ்டெண்ட் ஸர்சன்

கேப்டன் கோ. சி. சூரிய நாராயண சர்மா எல். எம். எஸ்.

விரும்பி யளித்த

## நீலமண்டில ஆசிரியப்பா.

நந்தமிழ் நாட்டின் நீணிழ லாடிடு
அகனெறி பற்றி யலைத்திடு வீரேற்
கட்புலங் களிக்கக் காண்டகு தோற்றம்
எற்கரி தம்மவி யம்புதற் கேயே!
கருமுகி றழுவுஞ் சிகரஞ் செறியும்

நீலமால் வரைபல நெடிதுமே தொடர்தர
பைந்நிறப் புலனுங் தெங்குடன் கமுகுடன்
மரகதப் பொதும்ப ரிடையிடை மிளிர
கூயிடு சிறுபுனற் றுவிடு மந்தி
நெடுவா லிடையா,டு-னவு மயலுளச்

செம்மணற் குன்றிற் செக்கென வீழிப்
புற்றரைப் புடைத்துப் பெய்த வானங்
காமர் மகளிர் தணவற் பிரிந்து
கயற்க ணுகுத்துக் கயல முழுத
கட்புன லொக்குங் காணு றோடைக்

களத்தெதிர் ஊன்றுங் கவின்பெறு நதியு
மழிவுற் றழுந்திய மதிற்புற மருங்கில்
கூகை கூவக் குளிர்கா லுலவப்
பரற்கற் றுருவிப் பாய்ந்திடு நதியும்
கல்லணை யிவர்ந்து கடந்திடு கதியும்

குமரிகோட் டத்துக் குறைபா டிறைஞ்சுனர்
நறையுட னானுனி வேதனம் நல்கி
பகடுட னாங்குக் குக்குடங் கொணர்ந்து
குருதி கொதிப்பக் கோறலென் குனரும்
நீலவா ணிடத்தி லினிதுநின் றியங்கிடு

விண்மீன் செறிவும் வெண்ணில வொளியில்
காந்துறை சம்பு தீக்குரல் குழறுபு
செவிப்புலன் புடைப்பத் தனிநெறி கடக்குனர்

சிற்றடி நோவச் சிறுல்பொருக் குனரும்
என மேய்க்குன ரயலூர்ச் செல் லுனரும்

ஆனிரை காக்குனர் அடுபுல் விற்குனர்
புதுவது புரிந்தோர் புலத்திடை நீங்குனர்
விழாக் கொண் டாடுனர் விரைந்தூ ரணுகி
நறவமாந் துபுநகர் மருங்கே குகளியர்
மருத்துவர் விளிப்பான் மாழ்கிய மனத்தினர்

பிணியுற் றனர்கொடு தவிசுடன் செல்லுனர்
பிழையுற் றனர்கொல் தளையுற்றனர்கொல்
பல்லிய மார்ப்பப் பலபழி சனத் தொடு
இபமத னெருத்தத் தினமுற சாற்ற
கஞ்சரஞ் செய்திடு சாமிகளே கொல்

அயாத மூர்ந்தும் அடலர செய்தி
அவணிவண் அலையுறு அலுவலோ ராக
பிறன் மனை விழையுனர் தீத்தொழி லாளர்
கூலவா ணிகர் கொடுங் கொலைக் குறவர்
மலைபொருள் கொணர்வோர் மந்திரர் தந்திரர்

மங்கைய ரரிவைய ரில்மயற் பேதை
மற்றுமே யாவரே மீண்டு மனமுளை
அமயத் துதவுங் கெவுளிப் பலனை
சரதமன் றென்று சாற்றுவான் றுணிவர்!
சாத்திரந் தொகுத்தவி யாதனே தொட்டுச்

சகதல மிசைநவில் பலபல புதுமைத்
தோற்றம் யாவுமே, தொல்பா, ரதத்தின்
நகைசால் பழமைப் பாழ்ங் கதையாக
நுவன்றிட னோக்குபு நம்மனோர் சொற்ற
புரைதீர் பனுவலைப் பரிசோ திக்குனர்

பலபடப் புனைந்து பாங்குடன் பரிந்து
உரைநலந் துணிந்து நுண்பொருள் நுனித்து
ஈதிதன் பொருளால் எற்குவீ ரெனமொழி
பாவலர் போற்றும் பண்டைய நூற்கள்
பனையோ லைகளிற் பரதவித் தழியுமுன்

மெச்சுவே லையெனு நச்சுவே லையாய் முடி
தச்சுவே லையைநிக ரச்சுவே லையினுழை
எம்மவர்க் குழைத்திடு வுத்தம தன்புரச்

சாமி நாதத் தூயனே தொட்டுத்
தண்டமிழ்த் தொண்டரிற் றளர்வுறுத் தனிகரின்

வழிவழித் தோன்றிய வேளாண் குலத்தன்
ஆழ்ந்த அறிவினன் அலர்ந்த முறுவலன்
யாதிடர்ப் படினுஞ் சோதிடந் தேர்தலின்
மேற்றிசை நடப்பிலும் ஏற்றவை ஏற்குனன்
திராவிட மொழிதனிற் றெள்ளிய நடையினில்

யாவரும் பயில்தர வவாவுடை யருளினன்
பற்பல வாண்டதின் பகர்வரு பணிப்பயன்
கற்குபு புகுவான் கிரந்தம் பலவுள்
போற்றிடு புராதனப் பொக்கிஷ மாயுள
ஆரியர் பாடையிற் றேரிய பாற்கான்

ஆர்வமிக் கூர்ந்து சோர்வடை மாக்களின்
சமயத் துதவிடுங் கவுளிகூர் மாற்றம்
பயன்பல கண்டுப கர்ந்தது பரிவால்
சமற்கிரு தந்தெரி பவர்க்கலா துதவாத்
தகைமைத் தாகிச் சிதைவுற் றழியுங்

கதியெய் திடலாற் றளருந் தமிழர்
இப்புத் தகமெய் துதலா லுவகை
மீக்கொண் டாங்கவர் வரைந்துள குறிப்புகள்
நோக்குபு ஐயந் திரிபற வுணர்ந்து
தேரத் தேரத் தெளிவுறு மனத்தராய்

பாரத் தனையும் பரவிடு வழியதாய்
யாரித் துணைபெரு நலம்புரிந் தனனென்?
சீலத் தவமுடன் சிவநெறி பற்றி
ஞாலத் தனைநிகர் நற்புகழ் தாங்கிய
செங்,கம லம்மெனு புங்கவன் புதல்வன்

பன்னரு வளமுடைச் சின்ன சேலத்து
உரைசால் நூல்தெளி துரைசா மிப்பெயர்
அன்னவன் கூறிய யருநூல் வாழி!
பின்னரும் பலநூல் பிரசுரித் திடவிங்ஙன்
உன்னிடு மவர்தம் ஊக்கமு மோங்கிட!

தன்னுடை தனையன் தந்திடு சாத்திரம்
மண்ணுள நாளில் நோக்கி லனுக
விண்ணகம் புக்க தந்தையின் பெயர்நிலந்
தங்கிடு செய்தசெங் கமலமும் வாழி!
இனியிதைப் பரவுவோ ரேனையோ ருடனே.

# அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| உரிமை யுரை. | | |
| ஆக்கியோன் முகவுரை. | | 1 |
| நூன்முகம் (இதை அவசியம் நன்றாய்ப் படிக்க) | | 3 |
| வாரக்கணிதம்:— | | |
| ஞாயிற்றுக் கிழமைப் | பகல் | 7 |
| ,, ,, | இரவு | 8 |
| திங்கள் கிழமைப் | பகல் | 9 |
| ,, ,, | இரவு | 10 |
| செவ்வாய்க் கிழமைப் | பகல் | 11 |
| ,, ,, | இரவு | 12 |
| புதன் கிழமைப் | பகல் | 13 |
| ,, ,, | இரவு | 14 |
| வியாழக் கிழமைப் | பகல் | 15 |
| ,, ,, | இரவு | 16 |
| வெள்ளிக் கிழமைப் | பகல் | 17 |
| ,, ,, | இரவு | 18 |
| சனிக் கிழமைப் | பகல் | 19 |
| ,, ,, | இரவு | 21 |
| பலன் பாகம் | | 22-54 |

## உரிமையுரை.

எனது கல்வி வளர்ச்சிக்கும் ஒழுக்க அபிவிருத்திக்கும் முதற் காரணரா யிருந்த என் ஆருயிர்த் தந்தையார் ஸ்ரீமான் சேங்கமலம் பிள்ளை அவர்களது இணையடித் தாமரைகட்கு யானியற்றிய இந் நூலை அன்பு கனிந்து உரிமை யாக்குகின்றேன்.

S. துரைசாமிப் பிள்ளை

உ

ஓம் ஷண்முகாய நம:

# முகவுரை.

மனித வர்க்கத்தாராகிய நமக்கு எதிர்காலத்து வருங்காரியங்களை நிகழ்காலத்தறிந்து அதற்குத்தக நாம் நடந்து கொள்ளுமாறு, காருண்ய மூர்த்தியாகிய ஈச்வரன்—மனிதர், விலங்கு, பறவை, பல்லி, காக்கை, ஆந்தை, மூஞ்சூறு முதலிய ஜீவராசிகளைத் தூண்டியும், நெருப்பு நீர் வாயு முதலிய பொருள்களை அதிட்டித்து நின்றும் நமக்கு அறிவிக்கின்றார். அவற்றுள் கெவுளி வாக்கு மிக்க உறுதியுடையது. அஃது எழுத்திலா இசையோசையுடையது. அஃதை அறிந்துரைத்தல் அருமையினும் அருமையே! நமது இந்திய குடும்பங்களில் கெவுளி வாக்கை கவனியாத குடும்பமே யில்லை யெனலாம். ஒவ்வொரு குடும்பத்தாரும் கெவுளியின் இசையோசையை உற்றுக் கவனிக்கின்றார்கள். ஆனால் அது சொல்லுவது இன்னதென்றும், இன்னாருக்கென்றும் திட்டமாய்த் தெரிந்து கொள்ள அவர்களால் இயலுவதில்லை. பல ஆன்றோர்களால் காலந்தோறும் கெவுளி நூல்கள் பல செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சமஸ்கிருதத்தில் பாஸ்கரர் செய்த முதனூலை ஆதரவாக்கொண்டு இராமசாமி நாவலரால் செய்யப்பட்ட கெவுளி நூலே மிக்க திட்பமும் நுட்பமும் விரிவுமுடையது; அநுபவத்திலும் மிக்க சித்தி யுடையது. அந்நூலைக் கற்றுத் தெளிவது சோதிட வல்லுநர்க்கும் அரிதாயிருத்தலின் அந்நூல் யாருக்கும் பயனளியாது நின்றது. கள்ளக்குறிச்சித் தாலுக்கா விளம்பாவூர் சோதிடம் நாயினு நாயடு என்பவரிடமிருந்து எற்குக் கிடைத்த அந்நூலின் ஏட்டுப் பிரதியைக் கொண்டு காகிதப்பிரதி ஒன்று செய்து அஃதை யான் பன்னாள் ஆராய்ச்சி செய்து அநுபவத்தில் கவனித்து வந்ததில், பலன்கள் வெகு ஆச்சரியமாய்ப் பலிதமானதைக் கண்டு, உற்சாகங்கொண்டு, இப்பலனைக் கல்வி யாற்றலுளாரும் இலாரும் அறிந்து பயனடையும் பொருட்டு அந்நூலின் அமைப்பையே பல்வேறு விதமாய் மாற்றி மாற்றிப் பார்த்து ஒரு வகையில் துணிந்து கிரக சம்பந்தத்தையே முற்றிலும் நீக்கி 448-பலன்களை 64-பலன்களாகச் சுறுக்கி வசன நடையில் (சந்தேக

நிவர்த்திக் குறிப்புகளுடன்) இந்நூல் எழுதினேன்; என் அருமைத் தந்தையாரின் பெயர் விளங்க இந்நூலுக்கு "சேங் கமலம்" என்னும் பெயர் தந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் உபயோகப்படுமாறு சிறு நூலாய் நன்னடையாய் விளக்க முடைத்தாய் அச்சிட்டிருக்கின்றேன். இந்நூலை இம்முறையில் அமைத்தற்கு அடைந்திருக்கும் அரிய உழைப்பின் அருமையை அறிந்தோரே அறிவர்.

இங்கிலீஷிலும் மொழி பெயர்த்தளிக்குமாறு எனது நண்பர் பலர் கேட்கின்றனர். அங்ஙனமும் செய்தளிப்பல்.

காலஞ் சென்ற என்தந்தையார் மகா-ா-ா-ஸ்ரீ சேங்கமலம் பிள்ளை யவர்களது இனிய கட்டளையைச் சிரமேற்கொண்டு வகுக்கப்பட்ட இந்நூல் அன்னர் இருந்த காலத்திலேயே முற்றுப் பெற்று-யான் படிக்க - அவர் கேட்டானந்த மடைந்தனர். ஆயினும் அன்னர் இருந்தபோதே இஃதை அச்சேற்றி வெளியிடாது போனமை பற்றிப் பெரிதும் மனமுளைகின்றேன்.

இந்நூலை அச்சிட்டு வெளியிட் டுதவுமாறு பன்முறை என்னைத் தூண்டிய - திருவனந்தபுரம் மாந்தரீக-வைத்திய பண்டிதரும், சுப்ரமண்ய வரப்பிரசாதியுமாகிய ஸ்ரீமத் - பாலையானந்த ஸ்வாமிகள்; காட்டுக் கொட்டை-பரோபகார சம்பன்னரும் - பென்ஷன் தாரருமான ஸ்ரீமான் S. காங்க முத்துப் பிள்ளையவர்கள்; சதாசிவபுரம் - வைத்திய பண்டிதர் - வீரமாகேச்வர A. வீரணய்யரவர்கள்; ஆத்தூர்-என் தந்தையனைய - ஸ்ரீமான் M. நாதமுனிப் பிள்ளையவர்கள்; செவ்வாப்பேட்டை (என்பால் பேரன்பு கொண்டொழுகும்) கனம் இரத்ன முதலியாரவர்கள் ஆகிய இவர்களின் கருணைத் திறம் ஒரு பொழுதும் மறக்கற்பாலதன்று.

இதனை அச்சிடுதற்கு எற்கு யாதொரு சிரமமும் கொடாது தாமே முன்னின்றுதவி அச்சிட்டளித்த (என்னுடு கலை பயின்ற) என்றன் ஆருயிர் நண்பர் (செவ்வாப்பேட்டை) கனம் S. M. சொக்கலிங்க முதலியாரவர்களின் நன்றி என்றும் என்றன் மனம் விட்டகலாது.

இந்நூலில் பிழையேதேனு மிருப்பின் பேரறிவாளராயினோர் எற்குத் தெரிவிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

சின்ன சேலம்,
5—3—1925.

S. துரைசாமிப் பிள்ளை,

ஆக்கியோன்.

ஓம் சுப்ரமண்யாய நம :

இந்த நான்முகத்தைப் பலமுறைப் படித்துப் பார்த்துப் பின்னர் உள்நூலில் பிரவேசிப்பீர்களாக!

# நூன்முகம்.

---

**நல்ல** சுவரினும், பசிய மரத்தினும், நல்ல வீட்டினும், சிறப்புப் பொருந்திய கோயிலினு மிருந்து சொல்லிய பல்லிப் பலன்களே பலிதப் பலன்களாம். பட்டமரத்தினும், பாழுஞ் சுவற்றினும், நிலத்தினும் கெவுளி சொல்லின் அச்சொற்கள் வெறும் பலனும்; ஆதலின் அப்பலன்களைப் பகராதொழிக. கெவுளி தன் இசை யோசையை இசைத்தவுடன், இசைத்த திக்கையும் நேரத்தையும் அன்றைய வாரத்தையும் சுத்தமாய்த் தெரிந்து குறிப்பிடல் வேண்டும். இம்மூன்றில் ஒன்று பிசகினும் பலன் முழுதும் பிசகும். ஆதலின் அவைகளில் தவறுதல் இழையாதிருத்தல் வேண்டும். திசை, நேரம், வாரம் இம்மூன்றையும் மனதில் சுத்தமாய்க் குறித்துக்கொண்டு இப்புத்தகத்தில் பலன் பார்க்க ஆரம்பித்தல் வேண்டும். இப்புத்தகத்தில் ஒவ்வொரு வார கணிதத்திற்கும் ஒவ்வொரு பக்கம் விடப்பட்டிருக்கின்றது. அப்பக்கத்தின் தலைப்பில் வாரத்தின் பெயர் பெரிய எழுத்துக்களால் எழுதப் பெற்றிருக்கின்றது. எந்த வாரத்திற்கு கெவுளிப் பலன் தேவையோ அந்த வாரத்திற்குரிய பக்கத்தை எடுத்துக் கொள்ளல் வேண்டும். பிறகு அப்பக்கத்தின் இடது புறத்தில் பதியப்பட்டிருக்கும் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய திக்குப் பெயர்களில் கெவுளி சொல்லிய திக்கு எதுவோ அத்திக்கின் பெயரை இடதுகை விரலால் தொட்டுக்கொண்டு, அப்பக்கத்தின் தலைப்பில் குறிப்பிட்டிருக்கும் நேரத்தைக் கவனித்து, கெவுளி சொல்லியது எந்த நேரமோ அந்த நேரம் குறிப்பிட்டிருக்கும் தலைப்பை வலக்கை விரலால் தொட்டுக் கொண்டு - வலக்கை விரலைக் கீழ் நோக்கியும், இடக்கை விரலை வலம் நோக்கியும், நகத்தினல் இரண்டும் சந்திக்கு மிடத்தில்

ஒரு லக்கம் இருக்கக் காணலாம். அந்த லக்கத்தை ஞாபகத்தில் குறித்துக்கொண்டு பின்னால் எழுதப்பட்டிருக்கும் பலன் பாகத்தில் அந்த லக்கத்தைக் கவனித்தால் அதற்கெதிரில் பலன் எழுதி யிருக்கப் பார்க்கலாம். அப்பலனே கெவுளி சொல்லியதின் பலனும். அப்பலன் யாருக்குரியது என்பதை இங்குள்ள குறிப்புகளினால் அறிக.

சாதாரணமாய் நம்மவர்கள் எதையேனும் நினைத்துக்கொண்டேனும் பேசிக்கொண்டேனும் இருக்கும்போது கெவுளி சொன்னால், தாங்கள் பேசிக்கொண்டிருந்த அல்லது நினைத்துக் கொண்டிருந்த விஷய சம்பந்தமாய் கெவுளி சொல்லியதாயும், அது தங்களுக்குச் சொல்லியதாயும் நினைக்கின்றார்கள். அது முற்றிலும் பிசகு. கெவுளி பகலில் சொன்னால் 8-திசைகளுக்கும் தனித்தனி இன்னின்னாருக்குரிய பலனென்றும், இரவில் சொன்னால் திசை 8-க்கும் தனித்தனி இன்னின்னாருக்குரிய பலனென்றும், அடியில் கண்டவிதமா யறிதல் வேண்டும். இதற்கு வாரங்கிழமை கணக்கில்லை. எக்கிழமை யாயினு மொன்றே.

பகல்:—கிழக்கு - தனக்குரிய பலன்

தென்கிழக்கு - நட்பினர் மைந்தர்கட்குரிய பலன்

தெற்கு - பரிவேந்தர்க்குரிய பலன் (இது கிராம முனிசீப், கிராம மணியக்கார், கிராமத்தலைவர், கிராமப் பெரியதனக்கார் போன்றவர்கட்குரிய பலனு மென்பது அனுபவம்.)

தென்மேற்கு - தனக்குரிய பலன்

மேற்கு - அன்னியோர்க் குரிய பலன்

வடமேற்கு - தனக்குரிய பலன்

வடக்கு - பரிவேந்தர்க்குரிய பலன் (மேலே குறிப்பிட்டுள்ள தென்றிசைக்குரிய பலனைப் பார்த்தறிக)

வடகிழக்கு - நட்பினர் - மைந்தர்கட்குரிய பலன்.

இரவு:—கிழக்கு - தனக்குரிய பலன்

தென்கிழக்கு - மன்னர்க் குரிய பலன்

தெற்கு - தனக்குரிய பலன்.

தேன்மேற்கு }- இஷ்டர், பிள்ளைகள், சுற்றத்தாருக்குரிய
மேற்கு - } பலன்.

வடமேற்கு - மன்னர்க்குரிய பலன்

வடக்கு - தனக்குரிய பலன்

வடகிழக்கு - இஷ்டர், பிள்ளைகள், சுற்றத்தாருக்குரிய பலன்.

சின்ன சேலம்,
5—3—25.

இங்ஙனம்,
S. துரைசாமிப் பிள்ளை,
ஆக்கியோன்.

# ஞாயிற்றுக் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 0·0 | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 18·45 | 22·30 | 26·15 |
| இதுவரையில் | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 18·45 | 22·30 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 8 | 5 | 3 | 3 | 1 | 1 | 8 | 8 |
| தென் கிழக்கு | 18 | 18 | 19 | 19 | 17 | 22 | 23 | 23 |
| தெற்கு | 34 | 34 | 36 | 40 | 33 | 33 | 39 | 39 |
| தென் மேற்கு | 28 | 28 | 27 | 27 | 25 | 25 | 26 | 29 |
| மேற்கு | 45 | 45 | 42 | 42 | 43 | 41 | 47 | 47 |
| வட மேற்கு | 50 | 50 | 52 | 52 | 49 | 49 | 56 | 56 |
| வடக்கு | 16 | 16 | 15 | 15 | 9 | 9 | 15 | 14 |
| வட கிழக்கு | 60 | 60 | 58 | 57 | 57 | 57 | 59 | 59 |

# ஞாயிற்றுக் கிழமை இரவு

| | நாழிகை விநாடிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 30·0 | 33·45 | 37·30 | 41·15 | 45·0 | 48·45 | 52·30 | 56·15 |
| இதுவரையில் | 33·45 | 37·30 | 41·15 | 45·0 | 48·45 | 52·30 | 56·15 | 60·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 8 | 7 | 7 | 6 | 6 | 6 | 4 | 4 |
| தென். கிழக்கு | 24 | 24 | 24 | 21 | 21 | 22 | 20 | 20 |
| தெற்கு | 36 | 36 | 36 | 38 | 38 | 38 | 35 | 35 |
| தென் மேற்கு | 30 | 30 | 30 | 29 | 29 | 29 | 31 | 29 |
| மேற்கு | 46 | 46 | 46 | 44 | 43 | 44 | 43 | 43 |
| வட. மேற்கு | 55 | 50 | 55 | 53 | 53 | 53 | 51 | 51 |
| வடக்கு | 11 | 11 | 11 | 12 | 12 | 12 | 15 | 10 |
| வட கிழக்கு | 63 | 63 | 63 | 57 | 61 | 61 | 62 | 62 |

# திங்கட் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 0·0 | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 18·45 | 22·30 | 26·15 |
| இதுவரையில் | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 18·45 | 22·30 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 4 | 5 | 8 | 5 | 3 | 3 | 3 | 1 |
| தென் கிழக்கு | 20 | 18 | 18 | 18 | 19 | 19 | 19 | 22 |
| தெற்கு | 35 | 34 | 54 | 34 | 36 | 40 | 40 | 33 |
| தென் மேற்கு | 31 | 29 | 28 | 28 | 27 | 27 | 27 | 25 |
| மேற்கு | 43 | 45 | 45 | 45 | 42 | 42 | 43 | 41 |
| வட மேற்கு | 51 | 50 | 50 | 50 | 52 | 52 | 52 | 49 |
| வடக்கு | 15 | 16 | 16 | 16 | 15 | 15 | 15 | 9 |
| வட கிழக்கு | 62 | 60 | 60 | 60 | 58 | 57 | 58 | 57 |

# திங்கட் கிழமை இரவு

| | நாழிகை விநாடிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இதுமுதல் | 30·0 | 33·45 | 37·30 | 41·15 | 45·0 | 48·45 | 52·30 | 56·15 |
| இதுவரையில் | 33·45 | 37·30 | 41·15 | 45·0 | 48·45 | 52·30 | 56·15 | 60·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | |
| இதுமுதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 1 | 1 | 8 | 8 | 8 | 2 | 2 | 2 |
| தென் கிழக்கு | 17 | 17 | 23 | 23 | 23 | 22 | 22 | 22 |
| தெற்கு | 33 | 33 | 39 | 39 | 36 | 37 | 37 | 37 |
| தென் மேற்கு | 25 | 29 | 26 | 26 | 26 | 32 | 32 | 32 |
| மேற்கு | 41 | 41 | 47 | 47 | 47 | 48 | 43 | 48 |
| வட மேற்கு | 49 | 49 | 56 | 50 | 56 | 54 | 54 | 54 |
| வடக்கு | 15 | 9 | 14 | 14 | 14 | 13 | 13 | 13 |
| வட கிழக்கு | 57 | 57 | 59 | 59 | 59 | 57 | 64 | 64 |

# செவ்வாய்க் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 0·0 | 3·45 | 6·15 | 7·30 | 11·15 | 12·30 | 15·0 | 18·45 | 22·30 | 25·0 | 26·15 |
| இது வரை | 3·45 | 6·15 | 7·30 | 11·15 | 12·30 | 15·0 | 18·45 | 22·30 | 25·0 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 8 30 | 9·0 | 10·30 | 11·0 | 12·0 | 1·30 | 3·0 | 4·0 | 4·30 |
| இது வரை | 7 30 | 8·30 | 9·0 | 10·30 | 11·0 | 12·0 | 1·30 | 3·0 | 4·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 6 | 6 | 4 | 4 | 8 | 8 | 5 | 3 | 3 | 1 | 1 |
| தென் கிழக்கு | 12 | 18 | 19 | 19 | 19 | 17 | 17 | 23 | 23 | 22 | 22 |
| தெற்கு | 33 | 33 | 39 | 39 | 39 | 37 | 37 | 36 | 36 | 38 | 38 |
| தென் மேற்கு | 32 | 32 | 30 | 29 | 30 | 29 | 29 | 31 | 31 | 28 | 28 |
| மேற்கு | 44 | 44 | 43 | 43 | 43 | 45 | 45 | 42 | 42 | 41 | 43 |
| வட மேற்கு | 50 | 50 | 52 | 52 | 52 | 49 | 50 | 56 | 56 | 54 | 54 |
| வடக்கு | 9 | 15 | 15 | 14 | 14 | 13 | 13 | 11 | 11 | 12 | 12 |
| வட கிழக்கு | 64 | 64 | 63 | 63 | 63 | 61 | 61 | 62 | 57 | 57 | 60 |

# செவ்வாய்க் கிழமை இரவு

| நாழிகை விநாடிகள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30·0<br>31·15 | 31·15<br>33·45 | 33·45<br>37·30 | 37·30<br>41·15 | 41·15<br>43 45 | 43·45<br>45·0 | 45·0<br>48·45 | 48·45<br>50·0 | 50·0<br>52·30 | 52·30<br>55·0 | 55·0<br>56·15 | 56·15<br>60 0 |
| மணி நிமிஷங்கள் | | | | | | | | | | | |
| 6·0<br>6·30 | 6·30<br>7·30 | 7·30<br>9·0 | 9·0<br>10·30 | 10·30<br>11·30 | 11 30<br>12·0 | 12·0<br>1·30 | 1·30<br>2·0 | 2·0<br>3·0 | 3·0<br>4·0 | 4·0<br>4·30 | 4·30<br>6·0 |
| 1 | 8 | 8 | 2 | 2 | 8 | 7 | 7 | 7 | 7 | 6 | 6 |
| 22 | 22 | 24 | 21 | 21 | 20 | 20 | 20 | 20 | 20 | 18 | 18 |
| 38 | 35 | 35 | 34 | 34 | 40 | 40 | 36 | 36 | 40 | 33 | 33 |
| 28 | 27 | 27 | 29 | 25 | 26 | 26 | 26 | 26 | 26 | 32 | 32 |
| 41 | 47 | 47 | 48 | 48 | 46 | 46 | 46 | 46 | 46 | 44 | 43 |
| 54 | 55 | 55 | 53 | 53 | 51 | 50 | 51 | 51 | 51 | 50 | 50 |
| 12 | 10 | 15 | 16 | 16 | 15 | 15 | 15 | 15 | 15 | 9 | 9 |
| 60 | 58 | 58 | 57 | 57 | 59 | 59 | 59 | 59 | 57 | 57 | 64 |

# புதன் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 0·0 | 3·45 | 5·0 | 7·30 | 10·0 | 11·15 | 15·0 | 18·45 | 20·0 | 22·30 | 25·0 | 26·15 |
| இது வரை | 3·45 | 5·0 | 7·30 | 10·0 | 11·15 | 15·0 | 18·45 | 20·0 | 22·30 | 25·0 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 8·0 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1.30 | 2·0 | 3·0 | 4·0 | 4·30 |
| இது வரை | 7·30 | 8·0 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 4 | 8 | 8 | 5 | 3 | 3 | 1 | 1 | 8 | 8 | 2 | 2 |
| தென் கிழக்கு | 19 | 19 | 17 | 17 | 23 | 23 | 22 | 22 | 24 | 22 | 22 | 21 |
| தெற்கு | 39 | 39 | 39 | 39 | 36 | 36 | 38 | 38 | 35 | 35 | 34 | 34 |
| தென் மேற்கு | 29 | 30 | 29 | 29 | 31 | 31 | 28 | 28 | 27 | 27 | 25 | 25 |
| மேற்கு | 43 | 43 | 45 | 45 | 42 | 42 | 41 | 43 | 43 | 47 | 45 | 45 |
| வட மேற்கு | 52 | 52 | 49 | 50 | 50 | 56 | 54 | 54 | 55 | 55 | 53 | 53 |
| வடக்கு | 14 | 14 | 13 | 13 | 11 | 11 | 12 | 12 | 10 | 10 | 16 | 15 |
| வட கிழக்கு | 63 | 63 | 61 | 61 | 62 | 62 | 57 | 60 | 58 | 58 | 57 | 57 |

# புதன் கிழமை இரவு

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இதுமுதல் | 30·0 | 33·45 | 37·30 | 40·0 | 41·15 | 45·0 | 48·45 | 50·0 | 52·30 | 56·15 |
| இதுவரையில் | 33·45 | 37·30 | 40 0 | 41·15 | 45·0 | 48·45 | 50·0 | 52·30 | 56·15 | 60·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | |
| இதுமுதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 2 | 8 | 2 | 7 | 7 | 7 | 7 | 6 | 6 | 6 |
| தென் கிழக்கு | 21 | 21 | 21 | 20 | 20 | 20 | 20 | 18 | 22 | 18 |
| தெற்கு | 34 | 34 | 34 | 40 | 36 | 40 | 40 | 33 | 33 | 33 |
| தென் மேற்கு | 29 | 25 | 25 | 26 | 26 | 26 | 26 | 32 | 32 | 32 |
| மேற்கு | 48 | 48 | 48 | 46 | 46 | 46 | 43 | 43 | 44 | 44 |
| வட மேற்கு | 53 | 53 | 50 | 50 | 51 | 51 | 51 | 50 | 50 | 50 |
| வடக்கு | 16 | 16 | 16 | 15 | 15 | 15 | 15 | 9 | 9 | 15 |
| வட கிழக்கு | 57 | 57 | 57 | 59 | 59 | 57 | 59 | 64 | 64 | 64 |

# வியாழக் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இதுமுதல் | 0·0 | 3·45 | 7·30 | 10·0 | 11·15 | 15·0 | 18·45 | 20·0 | 22·30 | 26·15 |
| இதுவரையில் | 3·45 | 7·30 | 10·0 | 11·15 | 15·0 | 18·45 | 20·0 | 22·30 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | |
| இதுமுதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 4 | 4 | 4 | 5 | 5 | 5 | 5 | 3 | 8 | 3 |
| தென் கிழக்கு | 19 | 19 | 19 | 17 | 22 | 17 | 17 | 23 | 23 | 23 |
| தெற்கு | 36 | 39 | 39 | 37 | 37 | 37 | 37 | 36 | 36 | 36 |
| தென் மேற்கு | 30 | 30 | 30 | 29 | 29 | 29 | 29 | 29 | 31 | 31 |
| மேற்கு | 43 | 43 | 43 | 43 | 45 | 45 | 45 | 42 | 42 | 42 |
| வட மேற்கு | 52 | 52 | 52 | 49 | 49 | 49 | 49 | 56 | 56 | 50 |
| வடக்கு | 14 | 14 | 14 | 13 | 13 | 15 | 13 | 11 | 11 | 11 |
| வட கிழக்கு | 63 | 57 | 63 | 16 | 16 | 16 | 16 | 62 | 62 | 62 |

# வியாழக் கிழமை இரவு

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 30·0 | 33·45 | 37·30 | 40·0 | 41·15 | 45·0 | 48·45 | 50·0 | 52·30 | 56·15 | 58·45 |
| இது வரை | 33·45 | 37·30 | 40·0 | 41·15 | 45·0 | 48·45 | 50·0 | 52·30 | 56·15 | 58·45 | 60·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·30 | 5·30 |
| இது வரை | 7·30 | 9·0 | 10·0 | 10·30 | 12·0 | 1·30 | 2·0 | 3·0 | 4·30 | 5·30 | 6·0 |
| கிழக்கு | 1 | 1 | 1 | 8 | 8 | 8 | 8 | 8 | 8 | 8 | 2 |
| தென் கிழக்கு | 22 | 22 | 22 | 24 | 22 | 24 | 24 | 24 | 24 | 24 | 21 |
| தெற்கு | 36 | 38 | 38 | 35 | 35 | 35 | 35 | 35 | 35 | 35 | 34 |
| தென் மேற்கு | 28 | 28 | 28 | 27 | 27 | 27 | 29 | 29 | 27 | 27 | 25 |
| மேற்கு | 41 | 41 | 43 | 43 | 47 | 47 | 47 | 47 | 47 | 47 | 48 |
| வட மேற்கு | 54 | 54 | 54 | 55 | 55 | 55 | 55 | 55 | 55 | 50 | 50 |
| வடக்கு | 12 | 12 | 12 | 10 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 | 16 |
| வட கிழக்கு | 60 | 57 | 60 | 58 | 58 | 58 | 58 | 58 | 58 | 58 | 57 |

# வெள்ளிக் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 0·0 | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 16·15 | 18·45 | 22·30 | 25·0 | 26·15 |
| இதுவரையில் | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 16·15 | 18·45 | 22·30 | 25·0 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | |
| இதுமுதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 12·30 | 1·30 | 3·0 | 4·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 12·30 | 1·30 | 3·0 | 4·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 2 | 2 | 7 | 7 | 8 | 8 | 6 | 6 | 4 | 4 |
| தென் கிழக்கு | 21 | 22 | 20 | 20 | 20 | 18 | 18 | 18 | 19 | 19 |
| தெற்கு | 34 | 34 | 40 | 40 | 40 | 33 | 33 | 36 | 36 | 39 |
| தென் மேற்கு | 25 | 25 | 26 | 29 | 26 | 32 | 32 | 32 | 30 | 30 |
| மேற்கு | 43 | 48 | 46 | 46 | 46 | 44 | 44 | 44 | 43 | 43 |
| வட மேற்கு | 53 | 53 | 51 | 51 | 51 | 50 | 50 | 50 | 52 | 52 |
| வடக்கு | 16 | 16 | 15 | 15 | 15 | 9 | 9 | 9 | 14 | 14 |
| வட கிழக்கு | 57 | 57 | 59 | 59 | 59 | 64 | 64 | 64 | 63 | 57 |

# வெள்ளிக் கிழமை இரவு

| | நாழிகை விநாடிகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 30·0 | 33·45 | 37·30 | 41·15 | 42·30 | 45·0 | 48·45 | 51·15 | 52·30 | 56·15 |
| இதுவரையில் | 33·45 | 37·30 | 41·15 | 42·30 | 45·0 | 48·45 | 51 15 | 52·30 | 56·15 | 60·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9 0 | 10·30 | 11·0 | 12 0 | 1·30 | 2·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9 0 | 10·30 | 11·0 | 12·0 | 1·30 | 2·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 4 | 5 | 5 | 5 | 3 | 8 | 3 | 1 | 1 | 1 |
| தென் கிழக்கு | 19 | 22 | 17 | 17 | 23 | 23 | 23 | 22 | 22 | 22 |
| தெற்கு | 39 | 37 | 37 | 37 | 36 | 36 | 36 | 38 | 36 | 38 |
| தென் மேற்கு | 30 | 29 | 29 | 29 | 29 | 31 | 31 | 28 | 28 | 28 |
| மேற்கு | 43 | 45 | 45 | 45 | 42 | 42 | 42 | 41 | 41 | 41 |
| வட மேற்கு | 52 | 49 | 49 | 49 | 56 | 56 | 50 | 50 | 54 | 54 |
| வடக்கு | 14 | 13 | 15 | 13 | 11 | 11 | 11 | 12 | 12 | 12 |
| வட கிழக்கு | 63 | 61 | 61 | 61 | 62 | 62 | 62 | 60 | 60 | 57 |

# சனிக் கிழமைப் பகல்

| | நாழிகை விநாடிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 0·0 | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 18·45 | 22·30 | 26·15 |
| இதுவரையில் | 3·45 | 7·30 | 11·15 | 15·0 | 18·45 | 22·30 | 26·15 | 30·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 1 | 8 | 2 | 7 | 6 | 4 | 5 | 8 |
| தென் கிழக்கு | 17 | 23 | 22 | 24 | 22 | 20 | 18 | 19 |
| தெற்கு | 33 | 39 | 37 | 36 | 38 | 35 | 34 | 40 |
| தென் மேற்கு | 25 | 26 | 32 | 30 | 29 | 31 | 29 | 27 |
| மேற்கு | 41 | 47 | 48 | 43 | 44 | 43 | 45 | 42 |
| வட மேற்கு | 50 | 56 | 54 | 55 | 53 | 51 | 50 | 52 |
| வடக்கு | 9 | 14 | 13 | 11 | 12 | 15 | 16 | 15 |
| வட கிழக்கு | 57 | 59 | 57 | 63 | 61 | 62 | 60 | 58 |

# சனிக் கிழமை இரவு

| | நாழிகை விநாடிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இது முதல் | 30·0 | 33·45 | 37·30 | 41·15 | 45·0 | 48·45 | 52·30 | 56·15 |
| இதுவரையில் | 33·45 | 37·30 | 41·15 | 45·0 | 48·45 | 52·30 | 56·15 | 60·0 |
| | மணி நிமிஷங்கள் | | | | | | | |
| இது முதல் | 6·0 | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 |
| இதுவரையில் | 7·30 | 9·0 | 10·30 | 12·0 | 1·30 | 3·0 | 4·30 | 6·0 |
| கிழக்கு | 2 | 2 | 7 | 7 | 6 | 6 | 4 | 8 |
| தென் கிழக்கு | 22 | 22 | 24 | 24 | 22 | 21 | 20 | 20 |
| தெற்கு | 37 | 36 | 36 | 36 | 38 | 38 | 35 | 35 |
| தென் மேற்கு | 32 | 32 | 30 | 30 | 29 | 29 | 29 | 31 |
| மேற்கு | 48 | 48 | 46 | 43 | 44 | 44 | 43 | 43 |
| வட மேற்கு | 50 | 54 | 55 | 55 | 53 | 53 | 51 | 51 |
| வடக்கு | 13 | 13 | 11 | 11 | 12 | 15 | 10 | 10 |
| வட கிழக்கு | 64 | 64 | 57 | 63 | 61 | 61 | 62 | 62 |

(நான்முகத்தைப் பலமுறைப் படித்துப் பார்த்துப் பிறகு வாக்கணிதத்தைக் கவனித்து அதிலுள்ள திசைக்கும் - நோத்திற்கும் இடையிலுள்ள நெம்பரைக் குறித்துக்கொண்டு அதன் பிறகு அந்த நெம்பரை இந்த பலன் பாகத்தில் கவனிப்பீர்களாக !)

## பலன் பாகம்

**1** பகை வருதற்கு ஏதுவான கலக வார்த்தை அரசர்களுக்குள் நிகழும். (சூரி - சூரி)

[கெவுளி சொல்லியது பகலாகில் இப்பலன் 6 நாளையிலும், இரவாகில் 1 மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் அரசர்க் குரித்தாயின் அரசர்களுக்குள் கலக வார்த்தை நிகழுமெனவும், மற்றையோர்க் குரித்தாயின் அவர்கட்குக் கெடுதி செய்ய அரசாங்கத்தார் சதியாலோசனை செய்வார்களெனவும், அதனால் முடிவில் பாதகம் ஒன்றும் விளையாதெனவும் தேர்ந்துரைக்க.

[கெவுளி 1 தடவை சொல்லில், குறிப்பிட்ட காலத்திற்குள் பலன் நடக்கும்; அதே யிடத்தில் அப்போழுதே மற்றொரு முறை சொல்லில், குறிப்பிட்ட காலம் பாதிக்குள் பலன் நடக்கும் ; 3 தடவை சொல்லில், 3 ல் 1 பங்கு காலத்திற்குள் பலன் நடக்கும் ; திடமாய்ப் பலதடவை சொல்லில் வெகு சீக்கிரத்தில் பலன் நடக்கும். இஃது அநுபவத்தில் கண்டதாகும். இவ்வநுபவத்தை மற்றெல்லாப் பலன்களுக்கும் ஒட்டிக்கொள்க.]

**2** குதிரைபோன் ஆடையும், அரசரிடமிருந்து இன்பவார்த்தையும் நிச்சயமாய் வரும். (சூரி - சந்)

[கெவுளி சொல்லியது பகலாகில் இப்பலன் 9 நாளையிலும், இரவாகில் $2\frac{1}{4}$ நாளையிலும் நடக்குமென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இங்கு-குதிரை பொன் ஆடை வரும்-என்பது விலை கொடுத்துக் கொள்வதால் வருமா? பிறர் பிரியத்தால் அல்லது உரிமையால் இனும் கொடுத்தலால் வருமா ? எனும் சங்கைக்கு எவ்வகையாலேனும் ஒருவகையால் வரும் எனக் கொள்க. இவ்வகையாற்றான்வரும்என்றேுதற்குச்சோதிட சம்பந்தம் வேண்டியிருத்தலின் அஃதை முற்றிலுமே நீக்கிவைத் தெழுதிய இந்நூலிற்கு அஃது வேண்டாமென விடுத்தாம். இங்கு "குதிரைவரும்" என்றதை, குதிரை, பசு, காளை, எருது, ஆடு, மான் முதலிய வீட்டில் வைத்து வளர்க்கும் நாற்கால் ஜீவன்களில் ஏதேனும் ஒன்று வருமென் இப்பலனுக் குரியாரின் நிலைமை நோக்கி யூகித்துக் கொள்க. "பொன்வரும்" என்றதை, பொன் கட்டி, பொன் நாணயம், பொன்னாலாகிய நகை ஆகியவைகளில் ஏதேனும் ஒன்று வருமெனக் கொள்க. இனி உபலக்ஷணத்தால் வெள்ளி முதலாய லோக வகைகள், அவைகளாலாய நாணயங்கள், அணிகள் முதலியனவும் கொள்ளற்பாலனவேயாம். "அரசரிடமிருந்து" என்பதை அரசரிடமிருந்து அல்லது அரசாங்க அதிகாரியிடமிருந்து எனப்பொருள் கொள்க. "இன்ப வார்த்தை வரும்" என்பது நியாயஸ்தலத்தில் (கோர்ட்டில்) செய்திருந்த வழக்கில் ஜெயம் எய்திற்று எனுஞ் செய்தி கிட்டல், உத்தியோகம் அளித்தருளுமாறு வேண்டி விடுத்திருந்த மனுவிற்குப் பதிலாமாறு உத்தியோகம் அளித்தோம் எனும் உத்தரவுச் சீட்டு எய்தல், உத்தியோகத்தில் எதிர் பார்த்திருந்த ஊதிய உயர்வு (Promotion) சாதித்தோமென நிருப சாசனங் கிடைத்தல் இவைபோன்றனவாம்.

இக்கெவுளியின் பொதுப் பலன்களாவன:—ஆடு, மாடு, கன்று, காலி, வாகனம் வர்த்திக்கும்; பூமி, மனை, சேரும்; விளைவு செழிக்கும்; செல்வம் மிகும்; வாணிப லாப மெய்தும்; தனஞ் சேரும்; பொன் வெள்ளி ரத்னாபரணம் செய்ய நேரும்; பொன், வெள்ளி, காசு, பணம் எய்தும்; உடை, உடுப்புகள் சேரும் ; மன்னரால் மனமகிழ்ச்சி தரும்;

அதிகாரம் பிராப்திக்கும்; சம்பள முயரும்; வெகுமான மெய்தும்; வியாச்சியங்கள் அநுகூலமாகும் என்பனவாம். அவரவர் நிலைமை தன்மை தொழிலுக்குத்தக இவைகளில் சிலவேனும் பலவேனும் சிறிதேனும் பெரிதேனும் சித்திக்குமென்க.

3 புது மாம்ஸம், சென்னிறப்பூ, அடைகாயுங் கொண்டு ஒரு மறையோன் இரு சூத்திரரோடு வருவன். அவன் சென்னிறன், முதுகில் மருவுடையான். (சூரி - செவ்)

புது மாமிசம்=காயாத மாமிசம்.
சென்னிறப்பூ=சிவப்பு புஷ்பம்.
மறையோன்=பிராமணன்.

[கௌளி சொல்லியது பகலாகில் இப்பலன் 5 நாளையிலும், இரவாகில் 1 நாளையிலும் நடக்குமென்பதாம்]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

சிலர் மாமிசத்தை வெயிலிலுலர்த்தி வற்றலாக்கி வைத்துண்ணல் வழக்கமாதலின் அதினின்று பேதம் விளங்குமாறு புது மாம்ஸம் என்றார். பிராமணன் மாம்ஸங் கொண்டு வருதல் இயற்கையன்று எனின், இரு சூத்திரரோடு வருவன் என்றமையால் அவர்களின் உதவியால் கொண்டுவருவன் எனவும், மாம்ஸம் இனிதாய்ப் புசிக்கும் மேலதிகாரிகளின் இனிய தயவை எதிர்பார்த்துக் கீழ் வரம்பிலுள்ள பிராமணன் அங்ஙனஞ் செய்தல் சகசமாமெனவும், தவிர வட நாட்டிலுள்ள பிராமணர் சகசமாய் மீன் உண்கின்ற வழக்கம் உண்டெனவு மறிக. இனி இப்பலன் மாம்ஸம் உண்ணு மறையோர்க்கு அல்லது மற்றையோர்க்கு உரித்தாயின் அஃதெங்ஙனம் பொருந்தும்? எனின், பரங்கிப் பழம் போன்ற கரியும், சென்னிறப்பூ, வெற்றிலைப் பாக்கும் சித்திக்கு மென பலனுக்குரியாரின் தன்மை நோக்கி யூகித்துணர்வாயாக! இவை, தயவை எதிர்பார்த்து இனமாய் வருவனவென்றறிக.

4 தேன் பால் வரும், மேலும் மன்னரிட மிருந்து ஒருவன் பட்டோலை கொண்டே வருவான். அவன் வணிகன், நற்சிவப் பன், எண் காததூர மிருந்து வருவான். (சூரி - புத)

எண்காதம்=8 காதம், அதாவது சுமார் 80 மைல்.

[கெவுளி சொல்லியது பகலாயினும் இரவாயினும் இப்பலன் ஒரு மாதத்தில் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

"தேன் பால் வரும்" எனின், தேன் பாலேனும் அவை போன்ற இனிய சுவையுள்ளவைகள் ஏதேனும் வரும் எனக் கொள்க; விலை கொடுத்துக் கொள்வதால் வருமா? இனாமாய்வருமா? எனின், அஃதை - இக் கெவுளி யாருக்குக் கூறுகின்றதோ அவரவர் தன்மை நிலைமைக்குத்தக யூகித்துக் கொள்க. "மன்னரிட மிருந்து பட்டோலைவரும்" எனின், அரசரிடமிருந்து அல்லது அரசாங்க அதிகாரியிடமிருந்து மனமகிழ்ச் சியைத் தரும் இன்பச்செய்தி யடங்கிய கடிதமொன்று ஆள் மூலமாயேனும் தபால் மூலமாயேனும் வரு மென்க. அஃதைக் கொண்டுவரும் ஆள் அல்லது தபாற் காரன் சிவந்த நிறமுடையவனா யிருப்பன். ஓலையனுப்பும் வழக்கம் இக்காலம் தேய்ந்து விட்டபடியால் காலத்திற் குத்தக இங்ஙனம் பொருள் கொள்ளப்பட்டதா மென்க.

5 சுத்தப் பிராமணன் ஒருவன் பணங் கொண்டுவந்து கொடுப்பன். (சூரி - குரு)

சுத்தப் பிராமணன்=வைதிக பிராமணன்.
=உத்தம பிராமணன்.

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் 1 மாதத்திலும் இப்பலன் நடக்கு மென்றறிக.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

பிராமணன் கொண்டுவரும் பணம் எவ்வளவு? எதற்காக? என்னுங் கேள்விக்கு விடை முதல் நூலில் காண்கிலம். ஆயினும் அப்போதைக் கப்போது செய்யக்கூடிய

சோதிட ஆரூட கிரக ஆராய்ச்சியால் இஃதை யறிய லாம். இங்கு சோதிடம் வேண்டாமென விடுத்தாம். 10-ம் செ. பலனையும் பார்த்துணர்க.

6 ஒரு கண்ணில் பழுதுள்ள ஒருவன் குதிரையேறி வெள்ளை வஸ்திரங்கோண்டு வருவான். பூ வரும். அவன் காலேனும் உதகேளேனும் கறுத்தேனும் வெள்ளை படர்ந்தேனு மிருக்கும். (சூரி - சுக்)

[செவுளி சொல்லியது பகலாகில் 30 நாளையிலும், இரவாகில் 1-பக்ஷத்திலும் இப்பலன் நடக்குமென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

குதிரைகளினும் மாடுகளினும் சுமைகளை ஏற்றி வருதல் முற்காலத்துப் பழக்கங்களாம். அவைகட்குப் பொதிமாடு களென்றும் பொதிக் குதிரைகளென்றும் பெயர். தவிர, நெடுந்தூரம் செல்வோர் மாடுகள்மேலும் குதிரைகள் மேலுமே அக்காலத்தில் ஏறிச்சென்றார்கள். இக்காலத் தில் வழி செல்லுதற்கு எத்தனையோவகை வண்டிகளும் ரதங்களு முள்ளன. ஆதலின் குதிரையேறி வரு தல் என்பதையே உறுதியாய்க் கொள்ளுதற்கில்லை. அவ்விதம் வரினும் வரலாம். வேறு எவ்வகையிலே னும் வரினும் வரலாம். அங்ஙனம் வருபவன் வெள்ளை வஸ்திரம் வெண்பூ கொண்டு வருவன். அவன் சொற்ப மேகவியாதி சம்பந்தனு யிருப்பன் என்பதாம்.

7 இடம் மனை காணி வழக்காய் இருவர் வருவர்; இருவருமே கருமை; ஒருவன் உயர் குலத்தோன்; மற்றையோன் குட் டையன், தாழ்குலத்தோன், அவன் வயோ திகன், ஒரு கையில் ஊன்று கோலுடை யோன். (சூரி - சனி)

[இப்பலன் செவுளி சொல்லியது பகலாகில் 8 நாளையிலும், இரவாகில் 6 மாதத்திலும் நடக்குமென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் யாருக்கோ அவரிடம் இருவர் வந்து தங்களுக்குள் நேர்ந்த நிலத்தகராரைச் சொல்லிக் கொண்டு அதற்குப் பரிகாரம் கேட்பர். அவர்கள் மேற்கண்ட குறிகளுடையவர்களா யிருப்பர் என்பதாம்.

8 ஒருவன் சாவோலை கொண்டு வருவான். (சூரி - இரா)
அவன் வஸ்திரக் கரை யிரண்டும் கறுப்பு,
இருண்ட மேனியன், சங்கர ஜாதியன்,
நெருங்கிய சென்னி மயிருள்ளான்.

[கெவுளி சொல்லியது பகலாகில் 10 அல்லது 25 நாளையிலும், இரவாகில் ஒரு வருஷத்திலும் இப்பலன் நடக்குமென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

ஒரு மரணச்செய்தி ஆள் மூலமாயேனும் தபால் மூலமாயேனும் வரும். அதைக் கொண்டுவருபவன் குலத்திலேனும் நிலைமையிலேனும் தாழ்ந்தவனா யிருப்பன். அவன் கரிய நிறமும், நெருங்கிய மயிரும், கருப்புக்கரை வஸ்திரந் தரித்தவனுமா யிருப்பன் என்பதாம்.

9 ஓதி யுணர்ந்த புலவர் வருவர். (சந் - சந்)

[இப்பலன் செவுளி சொல்லியது பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் $2\frac{1}{4}$ நாளையிலும் நடக்கு மென்றறிக.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

கற்றறிந்த வித்வான்கள் வருவார்கள். அவர்களோடு சம்பாஷிக்க நேர்வோம் என்பதாம். 56-ெ. பலனையும் பூர்த்துணர்க.

10 மறையவன் ஒருவன் பொன் தருவன். (சந் - செவ்)
அவன்தன் முதுகில் மறுவுண்டு. அவன்
செந்நிறன்.

மறையவன்=வேதமுணர்ந்தோன்=பிராமணன்.

[கெவுளி சொல்லியது பகலாகில் இப்பலன் 5 நாளையிலும், இரவாகில் ஒரு நாளையிலும் நடக்கு மென்பதாம் ]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

இப்பலனுக்குரியார் யாரோ அவருக்கு ஓர் உயர் குலத்தோன் அல்லது கல்வி யுணர்ந்தோன் பொன் வெள்ளி நாணயங்கள் நகைகள் ஏதேனும் கொடுப்பன். எதற்காக எதைக்கருதிக்கொடுப்பன் எனின், உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பாரின் தயவை எதிர்பார்த்துக் கொடுத்தல், விலைக்குக் கொடுத்தல், மற்று அடகுவைத்தல், ஒரு வஸ்துவைக் கிரையம் பெறல், பெற்றிருந்ததைத் திருப்பிக் கொடுத்தல் ஆகிய இவைபோன்றவைகளில் எதையேனுங் கருதிக் கொடுப்பன் என்றுணர்க.

**11** மங்கை ஆண் பெறுவள், தானியம் நெல் வரும். (சங் - புதன்)

[கெவுளி சொல்லியது பகலாயினும் இரவாயினும் இப்பலன் ஒருமாதத்தில் நடைபெறு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக் குரியார் யாரோ அவர் வீட்டில் ஆண்குழந்தை பிறக்கும் அல்லது அவர் வீட்டிற்கு நெல், தானியம் வரும் என்பதாம். கெவுளி இடமாயும் பன்முறையும் கூறின் இரு பலன்களும் சித்திக்கு மென்றறிக. வீட்டில் ஆண் பெறுவது மனைவியா? மற்று சுற்றத்தார் யாரேனும்பெறுவரா? எனின், இப்பலன் ஒருமாதத்தில் நடப்பதாதலின், தற்போது வீட்டில் 9 மாத கர்ப்ப முடையாள் யாரோ அவள் பெறுவது ஆண் என்றறிக. வீட்டில் கர்ப்ப முடையாள் யாருமே இல்லையாயின் ஒரு மாத வரைக்குள் மனைவிக்கு ஆண் கர்ப்பந்தோன்று மென்க. இப்பலன் ஒரு பெண்பாலார்க்காயின் அவள் ஒருமாத வரைக்குள் தனக்கே ஆண் பிறக்கும் அல்லது ஆண்கர்ப்பந் தோன்று மெனக் கொள்வாளாக. ஒரு சுத்த துறவிக்கு இப்பலன் தோன்றில் எங்ஙனம் பொருந்து மெனின் துறவிக்கு ஞானமே சிசுவென்பது ஞான நூற்றுணிபாதலின், துறவிக்கு ஞானேதையமாகு மென

வும் ஞானதீட்சை சித்திக்கு மெனவும் கொள்க. சிறுவர், சிறுமி, முதுமை வயதுடையோர், விதவையர், மனையாளில்லாதார் இவர்கட்கு கௌளி இப்பலனைக் கூறுதோ? வெனின், கூறினும் கூறலாம்; கூறின் அவர்கட்கு நெருங்கிய சுற்றத்தார் ஆண் பெறுவர் அல்லது அவர் வீட்டுப் பசு காளைபோடும் என்றுரைக்க. நெல்லைப்பற்றி 63 செ. பலனைப்பார்த்துரைக்க.

**12** மரணம் இரண்டு சம்பவிக்கும் அல்லது ஒரு மாங்கலிய ஸ்திரி சந்தனம் பூமணத்தோடு மாய்வள். இதனுரை தப்பாது. அல்லது இம்மரண வார்த்தையேனும் காதில் கேட்கும்படி தவருது எதிரேவரும். (சங் - குரு)

[கௌளி சொல்லியது பகலாகில் 5-நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் இப்பலன் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

மக்கள் சாவார், அல்லது மனைவி சாவாள், அல்லது அன்னியோர் மரணமான செய்தி காதிற் கெட்டும். இத்தீப்பலன்களில் யாதாயினு மொன்று தப்பாமல் சம்பவிக்கு மென்பது இதன் கருத்து. அநேகமாய் அன்னியோர் மரணமான செய்தி கிட்டுதலே இதன் அனுபவம். வீட்டில் ஏற்கனவே மனைவி மக்கள் அசுகமெய்தி யிருப்பின், சிவபூஜை செய்துவர சுகமெய்து மென்பர் அறிந்தோர்.

**13** கனி, காய், பூ, பாக்கு, வெற்றிலை வரும். (சங் - சுக்)

[இப்பலன் பகலாகில் ஒரு மாதத்திலும், இரவாகில் 15-நாளையிலும் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

பெண் வாங்கல் கொடுக்கல் சம்பந்தமாய் நடக்கும் நிச்சையார்த்தம் கலியாணம் இவை போன்ற பலவகை சுப சோபன காரியங்கட்கு பழம் தேங்காய் புட்பம் வெற்றிலைப் பாக்கு முதலியன வருதல் வழக்கம்.

ஆதலின் அவ்வித சுப காரியங்கள் நடக்க நேரும், என்றறிவாயாக. தெய்வ சந்நிதானம் குரு சந்நிதானம் பெரியோர் சமூகம் இவைகட்கும் மேற் சொல்லிய பழம் தேங்காய் முதலியன வருதல் வழக்கம் எனின், இது சுக்கிரன் ஆரூடப் பலனாதலின் இப்பலன் மேற் சொல்லிய சுப சோபன காரியங்களையே குறிக்கு மென்க.

**14** ஓர் வர்த்தகன் ஒரு பக்ஷியைப் பலருங் கண்டு மேச்சும்படி தருவான். (சங் - சனி)

[இப்பலன் பகலாகில் 8-நாளையிலும் இரவாகில் 6-மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

கிளி, புறா, வாத்து, கௌதாரி, மயில் முதலிய பக்ஷிகளைச் சிலர் வேடிக்கையாக வீட்டில் வைத்து வளர்த்தலுண்டு. சிலர் புசித்தற்காகவே வளர்த்தலு முண்டு. இவ்வித பக்ஷிகளில் ஏதேனுமொன்றை ஓர் வர்த்தகன் கொண்டு வர - அதை வாங்கநேரும் என்பதாம். இது மூதனூல் வார்த்தைக் கிணங்கிய அபிப்பிராயமாம். இக் கௌளி எனக்குச் சொல்லியதை நான் கவனித்ததில் சிலர் திடீரென எதிர் பாராத வண்ணமாய் வண்டி யேறிவந்து சில விவகார நிமித்தம் என்னை வண்டியிலேற்றிச் சென்றார்கள். இது என் அநுபவமாம்.

**15** திருடர் வருவர். (சங் - இராகு)

[கௌளி சொல்லியது பகலாகில் இப்பலன் 10-அல்லது 25-நாளையிலும், இரவாகில் ஒரு வருஷத்திலும் நடக்கும். கௌளி திடமாயும் பல முறையும் சொல்லில் பலன் வெகு சீக்கிரத்தில் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

திருடர்கள் வருவார்கள் என்று கௌளி முன்னரே எச்சரிக்கின்றது. எச்சரிக்கையா யிருந்தால் சொத்து திருடர் வசமாகாது, தவறின் திருட்டுப் போகு மென்றறிக. இப்பலன் யாருக் குரியதோ அவர் எச்

சரிக்கையா யிருப்பாராக! இக்கெவுளி ஒரு போலீஸ் அதிகாரி அறியச் சொல்லின் அது தனக்குரிய பலனு யினும் வேறு யாருக்குரியதாயினும் இக்கெவுளி சொல் லிய வூரில் திருடர் வருவார்கள் என்றுணர்ந்து, அவர் சர்வ ஜாக்கிரதையா யிருப்பாராக! கிராம முனிசீப்பும் மற்று பொது ஜன நன்மையைக் கவனிக்கக் கடமைப்பட் டவர்களும் அங்ஙனமே கவனிப்பார்களாக! கூடுமானல் ஜனங்களுக்கும் அறிவித்து ஜாக்கிரதையா யிருக்கச் செய்யலாம். போலீஸ் அதிகாரியாயினும் தனக்குரிய பலனுயின் தன் சொந்த சொத்துக்களைப் பற்றியும் வெகு ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும். பிரயாணம் செல் பவர் ஒருவருக்கு இக்கெவுளி வழியில் சொல்லில் அது அவருக்குரிய பலனுயின் அவர் ஜாக்கிரதையோடு பிர யாணஞ் செய்தல் வேண்டும். வேளாண்மைக் காரர்கள்-தங்கள் வேளாண்மை, விளைவு, தானியம், தானியக் குவியல், தானியப்போர், வைக்கோல் போர், ஆட்டு மந்தை, மாட்டு மந்தை, முதலியவைகளையும் பாதுகாப் புச் செய்து கவனித்தல் வேண்டும். இப்பலன்-பரிவேந் தர்க்காயின் கெவுளி சொல்லிய வூரின் கிராம முனிசீப், கர்னம், கிராமத்தலைவன் இவர்கள் வீட்டிலாயினும், கிராமத்திலுள்ள பிரதான தெய்வத்தின் கோயிலிலாயி னும், திருட்டுப் போகு மென்றறிக.

**16** அரசர் கோபத்துடனே கட்டளை எழுதி பறையன் வசம் அனுப்புவர். அப்பறை யன் கம்பளம் போர்த்திருப்பன். அவன் பெயரின் முதலெழுத்துச் சகர வருக்கம் அல்லது ககர வருக்கமா யிருக்கும். (சங் - சூரி)

[இப்பலன் பகலாகில் 6 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்தி லும் நடக்கு மென்பதாம்.]

*சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—*

*"கட்டளை" என்பதை இக்காலத்திற்குத்தக நியாயஸ்த லங்களி லிருந்துவரும் சம்மன் வாரண்டு முதலிய கட்ட*

ளைகளெனக்கொள்ளல் வேண்டும். 'பறையன்' என்பதை கோர்ட்டுசேவகன், ஜவான், அமீன், போலீஸ் சேவகன், போலீஸ் அதிகாரி,முதலியவர்களெனக் கொள்ளல்வேண்டும்.கம்பளம் என்பதை சொக்காய் உடுப்பு எனவுங்கொள்ளல் வேண்டும். இவை கால தேச வர்த்தமானங்களை நோக்கியும் அநுபவத்தை யொட்டியும் கூறியவையாம். "சகர வருக்கம் ககரவருக்கம்" என்பது சகர ககர வரியிலுள்ள எழுத்துக்களில் ஏதேனும் ஒன்று என்பது பொருள்.

**17** பெரும்பகை யுண்டாம். (செவ் - செவ்)

[இப்பலன் பகலாகில் 5 நாளையிலும் இரவாகில் ஒரு நாளையிலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக்குரியார் யாரோ அவருக்குப் பகைவரும் என்க. யாருடைய பகை வரும்?எனின், செவ்வா யாருடைமாதலின் அரசாங்க அதிகாரிகளின் பகையேனும், சகோதரர்களின் பகையேனும் வரும். சத்துருக்களும் மேலும் மேலும் பகைப்பர் என்க. சுப்ரமண்ய ஸ்வாமிக்கு அர்ச்சனை அபிடேகஞ் செய்து வேண்டிக் கொண்டால் பகை சாந்தமாகு மென்ப.

**18** பலாக்காய், பலாக்கனி வர்க்கம் எடுப்பித்துக் கோண்டு ஒருவன் குதிரை மேலேறி நிச்சயமாய் வருவன். (செவ் - புத)

[இப்பலன் பகலாயினும் இரவாயினும் ஒரு மாதத்தில் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்.—

குதிரை மேலேறியேனும், இக்காலத்திற்குத் தக மேன்மை பொருந்திய வேறு எவ்வித வகையினுலேனும் ஒருவர் வருவர். அவர் காய் கனி வர்க்கங் கொண்டு வருவர் என்றறிக.

19 யுத்தஞ் சம்பவித்து அதனல் இரத்தஞ் சோரிய அது எங்கும் பிரசித்தியாகும். (செ - குரு)

[இப்பலன் பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் பரிவேந்தர்க்காயின் பராளும் வேந்தர்களுக்குள் யுத்தஞ் சம்பவித்து இரத்தச் சேதம் ஏற்படும் என்றும், மற்றையோருக்காயின் அடிதடி சண்டை நேர்ந்து இரத்தக் காயம் ஏற்படும் என்றும் அறிவதாக. சிவ பூஜை, சிவ தியானஞ் செய்து வந்தால் இப்பலனின் குரோதம் சாந்த மாகு மென்பர்.

20 பலாக்காய் வரும். (செ - சுக்)

[இப்பலன் பகலாகில் 1 மாதத்திலும் இரவாகில் 15 நாளையிலும் நடக்கு மென்பதாம்.]

இப்பலன் யாருக்கோ அவர்க்கு பலாக்காய் எவ்வகையினலேனும் வரும்; அல்லது பலாக்காயைக் கண்ணல் பார்க்க வாயினும் நேரும்; அல்லது அஃதைப் போன்ற காய் வேறேதேனும் கிடைப்பினும் கிடைக்கும்.

21 சிலரை அரசர் கோபித்துக் கால் விலங்கும் கை விலங்கு மிட்டுத் தண்டித்து சிறைச் சாலையில் வைப்பர். (செவ் - சனி)

[இப்பலன் பகலாகில் 8 நாளையிலும், இரவாகில் 6 மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் பரிவேந்தர்க்காயின்—கிராம மணியக்காரன் அல்லது அவனைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வாபத்தான பலன் நடக்கு மென்க. இப்பலன் மற்றை யாருக்கேனுமாயின் அவருக்கு அல்லது அவரைச் சேர்ந்த சிலருக்கு இப்பலன் நடக்கு மென்றுணர்க. மிருத்துஞ் ஜெய ஜெபம் செய்ய நலமெய்துமென்பர்.

**22** உடனே விஷந்தீண்டும், அவ்விஷம் மேலும் மேலும் தலைக்கேறிச் சரீர முழுதுங் கதுவும், அல்லது விஷத்தால் முன்னமே மரணம் சம்பவித்திருக்கும். (செவ் - இராகு)

[இப்பலன் பகலாகில் 10 அல்லது 25 நாளையிலும், இரவாகில் ஒரு வருஷத்திலும் நடக்கு மென்பதாம்.]

*சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—*

*கௌளி சொல்லியது இரவாயினும் பகலாயினும் இப்பலன் வெகு குறுகிய காலத்தில் நடக்குமென்பது அநுபவம். பாம்பு கடிக்க வர அதற்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டதும், பாம்பைக் கண்டு பயப்பட்டதும், பாம்பைக் கண்டு அடித்து விட்டதும், பாம்பு கடித்து சிகிச்சையால் நன்மை யானதும், சிகிச்சை செய்தற்கு முன்னரே மரணமானதும், சிகிச்சை செய்துங்கூட மரணமானதும், ஆகிய இவ்வித பலன்களெல்லாம் இப்பலனுக்கு நடக்கக் கண்டேம். ஆதலின் முன் எச்சரிக்கையாய் விஷ நிவர்த்திக் குரிய மருந்துகள் தயார் செய்துகொண்டு ஜாக்கிரதையா யிருந்து நன்மை யடைவீர்களாக! நம்மை எச்சரிக்கை செய்தற்காகத்தான் கௌளி முன்னதாகவே நமக்குத் தெரிவிக்கின்றது என்பதை அறிவீர்களாக! மிருத்துஞ் ஜெய ஜெபமும் நாக பூஜையும் செய்தால் இப்பலன் பாதகஞ் செய்யாது ஒதுங்கும் என்பர் அறிந்தோர்.*

**23** மாமிஸம், மச்சங்கள் வரும். (செவ் - சூரி)

[இப்பலன் பகலாகில் 6 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் நடக்கு மென்க.]

*சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—*

*இப்பலன் மாமிசம் மச்சம் உண்போர்க்காயின் நேர்மையாம். அவை யுண்ணுதார்க்காயின் பரங்கிக்காய்த் துண்டுகள், வாழக்காய், வெண்டக்காய் போன்றன வருமென்றுணர்க.*

24 வாசனை பொருந்திய புட்பம் வரும். (செவ் - சந்)
அதனை வாங்கி உதவ நன்றும்.

[இப்பலன் பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் $2\frac{1}{4}$ நாளையிலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

வாசனைப் புட்பம் விற்பனைக்கு எதிராக வந்து சேரும். அதனை வாங்கி—தரித்துக் கொள்ளும்படி மனைவியார்க்கும் மற்றுரிய மடவார் மங்கையர்கட்கும் தந்தால், அவர்கள் அதைத் தலைக்கணிந்து இன்புறுவார்கள் என்பதாம்.

25 சுற்றத்தார் அல்லது சினேகிதர் வீட்டில் (புதன் - புதன்)
விருந்து நடக்கும்.

[இப்பலன் பகலாயினும் இரவாயினும் ஒருமாதத்தில் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

சுற்றத்தார் அல்லது நட்பின் குடும்பங்களில் கலியாணம் அல்லது கலியாணம் போன்ற சுப வைபவங்கள் நடக்குமெனவும், அச்சுப விருந்துகட்கு இப்பலனுக்குரியார் அழைக்கப் பெறுவர் எனவும், கெவுளி கூறுகின்றதென்பதாம்.

26 திருந்திய ஆபரணம், புஷ்பம், இரத்தினம் (புதன் - குரு)
வரும்.

[இப்பலன் பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் யாருக்கோ அவருக்கு நல்ல ஆபரணம் அல்லது ஆபரணம் வைத்தற்குரிய பெட்டி சித்திக்கும். தன்னிட முள்ள ஆபரணங்களைச் சீர்திருத்துதல், புதுப்பித்தல், அல்லது ஆபரணப்பெட்டியைப் புதுப்பித்தல் முதலியனவும் நேர்தல் அனுபவம்.

27 தேனையும், புளிச் சாணையையும், ஒரு பெண் அழகுடனே தாங்கிவருவாள்; அதுவுமன்றி, அரசரிடமிருந்து திருமுகமும் வரும். (பூதன் - சுக்)

[இப்பலன் பகலாகில் 1 மாதத்திலும், இரவாகில் 15 நாளையிலும் நடக்கும். ]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

புளியைக் கொட்டை நீக்கி நன்றாயிடித்து எண்ணெய் தெளித்துக் கல்லில் அடித்து உருட்டி வைத்துக்கொள்ளுவது கிராமப் பழமைக்குடிகளின் வழக்கம். அவ்வித புளி உருண்டைக்கு புளிச் சாணை என்று சொல்லுவது. இக்காலத்தில் புளியை அவ்விதம் பதனிட்டு வழங்குவது அரிது. ஆதலின் ஒரு பெண் தேன் புளி இவைகளைக் கொண்டு வருவாள் என்க. "அரசரிடமிருந்து திருமுகமும் வரும்", என்பதை அரசரிடமிருந்து அல்லது அரசாங்க அதிகாரியிடமிருந்து நற்செய்தி யடங்கிய கடிதம் வரும் எனப் பொருள் கொள்க.

28 குதிரை, ஆடு, மாடு, இவைகளில் ஏதேனும் ஒன்று இறந்து போயிற்றென்று ஓர் அருமையான மனிதர் சொல்லுவர். (புத - சனி)

[இப்பலன் பகலாகில் 8 நாளையிலும்,இரவாகில் 6 மாதத்திலும் நடக்கு மென்பதாம். ]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் யாருக்கோ அவர் காதுக்கு இவ்விதச் செய்தி எட்டு மென்பதாம். இதனால் அவருக்கு யாதொரு லாப நஷ்டமும் இல்லை என்க.

29 நோய் தவறாது வரும். (புத-இராகு)

[கௌவுளி சொல்லியது பகலாகில் 10 அல்லது 25நாளையிலும், இரவாகில் ஒரு வருஷத்திலும் நடக்குமென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக் குரியார் யாரோ அவருக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் நோய் தவறாது வரும். இதற்கு ருத்ர சகஸ்ர ஜெபம் பண்ணிக் கணராதனை செய்யப் பரிகாரமாம்.

30 இராஜ பயம் உண்டென்று சொல்லக் கடவாய். (புத-சூரி)

[கெவுளி சொல்லியது பகலாகில் இப்பலன் 6 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் வேந்தர்க்காயின் - கிராம முனிசீப்புக்கு அல்லது கிராம பெரிய தனக் காரருக்கு இப்பலன் நடக்கு மென்றும், மற்றவர்கள் யாருக்காயினு மாயின் அவரவர்கட்கு இப்பலன் நடக்கு மென்றும் - இராஜாங்கத்தாரால் ஏதாயினும் கெடுதி நேரு மென்றும் சொல்லக் கடவாய்.

31 ஒரு பெண் ஆச்சரியமாய் வருவள். அவள் வெள்ளை வஸ்திரமும் புட்பமும் தரித்திருப்பள். (புத - சந்)

[கெவுளி சொல்லியது பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் $2\frac{1}{4}$ நாளையிலும் இப்பலன் பலிதமாகு மென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

மாங்கல்ய மிழந்த ஸ்திரீகள்தான் வெள்ளை வஸ்திரம் தரிப்பார்கள் என்றும், அவர்கள் புட்பம் தரிக்க மாட்டார்க ளென்றும், ஆகவே வெள்ளை வஸ்திரமும் புட்பமும் தரித்த பெண் வருவாள் என்பது பொருத்தமில்லை என்றும், சிலர் அபிப்பிராயப் படலாம். அஃதப்படியன்று, மாங்கல்ய ஸ்திரீகளும் வெள்ளை வஸ்திரந் தரித்தலுண்டு. மலையாளப் பெண்கள் யாவரும் வெள்ளை வஸ்திரமே தரிக்கின்றார்கள். ஐரோப்பிய ஸ்திரீகளும் அவ்

விதந்தான். இந்தியச் சிறுமிகளும் வெள்ளைப் பாவாடை வெள்ளைத் தாவணி தரிக்கின்றார்கள். ஐரோப்பிய நாகரிகத்தில் ஈடுபட்ட இந்திய ஸ்திரீகளும் வெள்ளை உடுப்புகள் உடுக்கின்றார்கள். இந்திய ஸ்திரீகள் யாவருமே வெள்ளை ரவிக்கை உபயோகிக்கின்றார்கள். ஆகையால் இவ்வித ஸ்திரீகளில் யாராவது ஒருவள் பூ தரித்துக் கொண்டேனும் வாசனை அணிந்து கொண்டேனும் வருவாள் என்றறிக. "ஆச்சரியமாய் வருவள்" என்பதில் ஆச்சரியம் என்பது என்னையோ? வெனின், திடீரென எதிர் பாராத ஒரு பெண் வருதலும், புதுமையாய் வருதலும், மனோகரத் தோற்றத்துடன் வருதலுமே ஆச்சரியமா மென்க. எதைக் கருதி வருவள்? எனின், மனமகிழ்ச்சியைத் தரும் காரியமா யென்க.

**32** ஒரு பிராமணன் அயலூரிலிருந்து எவ்வித மாயினும் வந்து சேருவான். (புத - செவ்)

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் ஒரு நாளையிலும் இப்பலன் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

பிராமணன் எதற்காக வருவன்? எனின், ஒருவித உதவி பெறுதற்குத்தான் வருவான். அநேகமாய் ஒன்றை வாங்க வருவானே தவிர கொடுக்க வருதல் அருமை என்றறிக.

**33** மிகவும் அறிவுள்ள புண்ணிய விசேஷ முடைய குழந்தை பிறக்கும். (குரு - குரு)

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும் இரவாகில் ஒரு மாதத்திலும் இப்பலன் சித்திக்கு மென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக் குரியார் பெண்பாலாராயின் தனக்கே மிகவும் அறிவுள்ள புண்ணிய விசேஷ முடைய குழந்தை பிறக்கு மெனவும், ஆடவராயின் தன் மனையாட்கு அவ்விதக் குழந்தை பிறக்குமெனவும் அறிவாராக! இப்பலன்

ஒரு மாதத்தில் நடக்குமாதலின் - ஏற்கனவே 9 மாத கர்ப்ப மிருந்தாலன்றி ஒரு மாத வரையில் எங்ஙனம் குழந்தை பிறக்கும்? எனின், கர்ப்ப மில்லையாயின் இக் கால வரைக்குள் கர்ப்பந் தோன்று மென்க. இப்பலன் ஒரு துறவிக்கு உரித்தாயின் அஃதெங்ஙனம் பொருந்தும்? எனின், துறவிக்கு ஞானோதயமே சிசுவாகு மென்பது ஞான நூற்றுணிபாதலின், துறவிக்கு ஞானோதய மாகு மெனவும், அல்லது ஞானசாரியரால் ஞான தீட்சை சித்திக்கு மெனவும் கொள்க. சிறுவர், வயோதிகர், விதவை, மனையாளில்லாதார் இவர்கட்கு கெவுளி இப்பலனைக் கூறுதோ? எனின், கூறினும் கூறலாம்- கூறின், அவர்கட்கு நெருங்கிய சுற்றத்தார் குழந்தை பெறுவர், அல்லது அவர் வீட்டுப் பசு கன்று போடும் என்றுரைக்க குழந்தை ஆணோ பெண்ணோ என்கின்ற மற்றோர் சந்தேகம் தோன்றலாம்; அநேகமாய் ஆண் பிறக்கு மென்க. ஆயினும் அப்போதைக்கப்போது செய்யக்கூடிய ஆரூடகிரக ஆராய்ச்சியால் அஃதைத் திட்டமா யறியலா மென்க.

34 தேங்காய், பழம், வெற்றிலைப் பாக்கு, புட்பம் இவைகளை ஒருபிராமணன் எதிர் கொண்டு வந்து விஷ்ணுபோல் கொடுப்பன். (குரு - சுக்)

[கெவுளி சொல்லியது பகலாகில் இப்பலன் 30 நாளையிலும், இரவாகில் 15 நாளையிலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக்கு ஏதாயினும் தெய்வப் பிரசாதம் வரு மென்றறிக. இவ்வாரூடக் கெவுளி எனக்கு ஒரு முறை சொல்லியதைக் கவனித்தேன். இதன் பலனாக சிதம்பரம் நடராஜமூர்த்தியின் விபூதிப் பிரசாதமும் சிவகாமவல்லியின் குங்குமப்பிரசாதமும் தபாலில் வந்தன. தபாலில் வரினும் ஒரு பிராமணன் அனுப்பிய

தால்—பிராமணன் நேரில் கொண்டு வந்து கொடுத்தற்குச் சமம்தான் என்றோர்ந்தோன். தேங்காய் பழம் வெற்றிலைப் பாக்கு புட்பம் இவை வரவில்லையே எனின்—அவைகளை தெய்வ சந்நிதானத்தில் ஆராதித்து தெய்வ அருள் சாதிக்கப்பெற்ற பிரசாதங்கள் வந்தனவாகையால் இவைகளில் அவைகள் அந்தர்க்கதமாய் விட்டன வென்றறிந்தேன். இவ்வனுபவத்தைப் பிறரும் அறிந்து இஃதைப் போன்று இப்பலனுக்குப் பொருள் கொள்ளுமாறு என் அனுபவத்தை இங்கு வரைந்தேன். அவரவர்களும் அநுபவத்தில்அறிவார்களாக!(விஷ்ணு= கொடுத்துக் காக்குங் கடவுள், இங்கு பிராமணன் தெய்வப் பிரசாதம் கொடுத்து பாவப் பிணியினின்று காத்தல் என்பதாம்.)

35 வாக்குமுறி பத்திரங்களும், நாடும், ஆளடிமையும், பணங்காசுகளும் மகிழ்வாக வரும். (குரு - சனி)

[கெவுளி சொல்லியது பகலாகில் 8 நாளையிலும், இரவாகில் 6 மாதத்திலும் இப்பலன் நடக்கு மென்பதாம்]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

அடிமைக் காரர்கள் ஒப்பந்தப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்தல், நிலக் கிரையம் வாங்குதல்—நில பலச் சொத்துக்கள், அடிமைகள், பணங்காசுகள் உண்டாகுதல் இவை சித்திக்கு மென்க. ஒருவார்த்தையில்-செல்வம் மேலும் மேலும் பெருகு மென்றுரைக்க.

36 வெற்றிலைப் பாக்கு, வாசனைப்பூ, தேன், மாங்கனி, பலாப் பழங்கள் தருவார். அவை விஷங் கலந்தவையா யிருக்கும். (குரு - இராகு)

[இப்பலன் பகலாகில் 10 அல்லது 25நாளையிலும் இரவாகில் ஒரு வருஷத்திலும் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

விரோதிகள்—உண்பன, குடிப்பன, முகர்வன வகைகளில் எதிலேனும் விஷங்கலந்து கொடுப்பார்கள், ஜாக்கிரதையா யிரு என்று கெவுளி எச்சரிக்கின்றது என்பதாம். சிநேகிதர்கள், மனைவியர், வைப்பாட்டிகள் முதலானவர்கள்கூட பேதைமையால் வசியத்திற்காக வேண்டி ஒருவகை மருந்தோ மையோ உண்பனவைகளில் கலந்து கொடுத்து விடுவதுண்டு. அது மதி மயக்கத்தைக் கொடுத்து தேகத்தைக் கெடுத்து விடும். சில சமயங்களில் விரோதிகள் மரண மருந்தை வசிய மருந்தென்று மனைவியரிடங் கொடுத்து மரணத்தை விளைத்தலு முண்டு. சுருட்டு பொடி முதலிய வகைகளில் விஷங் கலந்து மரணம் விளைந்ததையும் யாம் கண்டுள்ளோம். ஆகையால் இதில் குறிப்பிட்ட காலம் வரையில் ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும். விஷ நிவர்த்திக்குரிய மருந்துகள் தயாரித்து வைத்திருந்து தவறுதல் நேர்ந்தால் உடனே உட்கொண்டு தப்பித்துக் கொள்வீர்களாக! வெற்றிலையில் ஒருவித விஷப் பூச்சிகளிருத்தலும், பாக்கிலும் ஒருவகை விஷப் புழுக்களும் துவர்ப்பான விஷ சம்பந்தமுமிருத்தலும், தாழம்பூ போன்ற புட்பங்களில் வெகு நுட்பமான விஷப் பாம்புகள் இருத்தலும், கனிந்துபோன பழவர்க்கங்களிலும் சிறு புழுக்கள் இருத்தலும், அவைகளால் தீங்கு நேர்வதும் இயற்கை. இவ்விஷயத்தையும் ஞாபகத்தில் வைப்பீர்களாக!

37 பாராளும் மன்னரினால் பலன் எய்தும். (குரு - சூரி)

[இப்பலன் கெவுளி சொல்லியது பகலாகில் 6 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் சித்திக்கு மென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

கிராம அதிகாரமளித்தல், உத்தியோகங் கொடுத்தல், வெகுமான மீதல், பிரமோஷன் சாதித்தல், பட்டமளித்

தல், முதலாய நன்மைகள்ஏதேனும் இராஜாங்கத்தார். ரால் சித்திக்கு மென்பதாம். இப்பலன் பரிவேந்தர்க்கு எனின் கிராம முனிசீப், கிராமத் தலைவன், கிராம பெரியதனக்காரன், கிராம கர்ணம் இவர்களில் யாரையே னும் குறிக்கு மென்றறிக.

**38** யாரேனும் பால் தயிர் தந்தருள்வார்கள். (குரு - சந்)

[இப்பலன் பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் 2¼ நாளையிலும் சித்திக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

பால்-தயிர்-காப்பி போன்ற வெள்ளை பழுப்பு நிற மான பானங்கள் ஏதேனும் குடிக்கும்படி நட்பாளர் கொடுப்பார்கள் என்றறிக.

**39** ஒருவன் நேராக வந்து நின்றுகொண்டு தரித்திரத்தைக் குறித்து விண்ணப்பஞ் செய்வான். (குரு - செ)

[பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் 1 நாளையிலும் இப்பலன் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

உணவு, உடை, காசு பணம், ஏதாவது கொடுத் துதவும் படி ஒரு தரித்திரன் வந்து கெஞ்சிக் கேட்பன்.

**40** சுகந்த புஷ்பமும், பந்துக்கள் தரிசன மும், வெற்றிலைப் பாக்குகளும் நிச்சய மாய் வரும், மற்றும் ஒரு பறையன் வாச ற்படியில் வருவான். அவன் வஸ்திரத்தி னது முன்றானை சிவப்பு நிறமாயிருக்கும். அதுவுமன்றி அரசரிட மிருந்து திருமுக மும் வரும். (குரு - புதன்)

[இப்பலன் பகலாயினும் இரவாயினும் ஒரு மாதத்தில் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

பந்துக்கள் வருவார்கள். அவர்கள் புஷ்பம் தாம்பூலம் கொண்டு வருவார்கள். தவிர அரசாங்கத்தாரிட மிருந்து நற்செய்தி வரும். இவை யிரண்டும் நிச்சயமாக வரும் என்பதற்கு அறிகுறியாக - சிவப்புக்கரை வஸ்திரந் தரித்த பறையன் ஒருவனை நீ உடனே வீட்டண்டைப் பார்ப்பாய் என்பது இதன் தாற்பரியம்.

41 வெண்மையான காய் கறிகள், நெய், பலாப்பழம், தேங்காய் முதலியன வரும். (சுக் - சுக்)

[கெவுளிசொல்லியது பகலாகில் இப்பலன் ஒரு மாதத்திலும், இரவாகில் 15 நாளையிலும் நடக்கு மென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

வெண்மையான காய் கறிகளாவன:—சாம்பல் பூஷணிக் காய், உருளைக்கிழங்கு, வள்ளிக் கிழங்கு போன்றன. இவ்விதக் காய்கறிகளும் தேங்காய் நெய் முதலியனவும் வரும் என்றால்—கலியாணம், சுபவிருந்து, தெய்வ சந் தர்ப்பணை, சமாராதனை போன்றன ஏதேனும் நடைபெறு மெனவும், அதற்கு மேற்கண்டவைகள் வருமெனவு மறிக. அசுப விருந்துகட்கும் மேற்கண்டவைகள் வேண்டுவனதானே? எனின், இவ்வாறுடப்பலனால் அசுப காரியங்கள் ஒன்றும் விளையாதென்றறிக.

42 வழியில் கேடு சம்பவிக்கும். அதற்கறி குறியாக வேடர்கள் எலியைப் பிடித்து அதை வழிச் செல்வோனுடைய கண் களுக் கெதிரே காட்டுவர். (சுக் - சனி)

[இப்பலன் பகலாகில் 8 நாளையிலும், இரவாகில் 6 மாதத்தி லும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிபபுகள்:—

இப்பலன் யாருக்கோ அவர் இதில் குறிப்பிட்ட காலத் திற்குள் வழிப் பிரயாணம் போவார் என்றும், வழியில்

கெடுதி சம்பவிக்கு மென்றும் அறிவாயாக. எவ்வித கெடுதி சம்பவிக்கும்? எனின் அதற்கோர் விடையும் முத னூலில் காண்கிலம். ஆயினும் வழிப் பிரயாணம் செல் வோர்க்கு நேரிடக் கூடியதான—ஏறிச் செல்லும் வண்டி முதலாயவைகட்குப் பழுது நேரிடல், வண்டிகளி னின்று தவறி விழுதல், வண்டி குடை கவிழ்தல், எடுத் துச் செல்லும் பொருள்களை வைத்து மறத்தல், பொருள்களை யாராயினும் அறியாமல் கைப்பற்றிக் கொள்ளல், தேகம் அசுகம் அடைதல் இவைகளும் இவை போன்றனவைகளுமான கெடுதிகளில் ஏதாயி னும் நடைபெறு மென்றறிக. இனி வேடர் எலியைப் பிடித்துக் காண்பிப்பர் என்பது—செல்லும் வழியில் கண்களுக் கெதிரே தற்செயலாய் புலப்படும் சம்பவம். இச்சம்பவம் முன்னர் நடக்கு மென்பதும் - மேற் சொல்லிய சம்பவம் பின்னர் நடப்பது—உறுதி என்ப தற்கு இச்சம்பவம் சாக்ஷி என்பதும் தாற்பரியமாம்.

43 மனம் ஒடுங்குவதற்கு ஏதுவாகிய இழ வோலையை ஓர் இழிகுலத்தோன் கொடு வந்து தருவான். (சுக் - இராகு)

[இப்பலன்—பகலாகில் 10 அல்லது 25 நாளையிலும், இரவா கில் ஒரு வருஷத்திலும்-நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:-—

ஆள் மூலமாயினும் தபால் மூலமாயினும் ஒரு மரண செய்தி வரும். மனம் ஒடுங்குவதற்கு ஏதுவாகிய என் றமையால் மரணமானவர் அநேகமாய் ஆத்ம பந்துவாய் அல்லது நேர்மையான நண்பராய் இருப்பர். தவிர மரணமானவர் மரண மூப்படையாதவராயு மிருப்பர்; என்னும் தாற்பரியமும் கொள்ளத்தக்கதா மென்க.

44 இருவருக்கும் பெருங் கலக முண்டா கும். (சுக் - சூரி)

[இப்பலன் பகலாகில் 6 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்தி லும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

மனைவி, மக்கள், தாயாதியர், அரசாங்கத்தார், இவர்களில் யாரோடாவது திடீரெனக் கலகம் நேரும். தன நஷ்டமும் நேரலாம் என்றறிக.

45 மழை வரும். (சுக் - சந்தி)

[இப்பலன்—கெவுளி சொல்லியது பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் 2¼ நாளையிலும்—நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் தனக்குரியதாயின் தன்னூரில் மழை பெய்யுமெனவும், அன்னியோர்க் குரியதாயின் வெளி நாட்டில் மழை பெய்யுமெனவும், பரிவேக்தர்க்காயின் பூமியின் பல பாகங்களிலும் விரிவாய் மழை பெய்யுமெனவும் அறிவாயாக! ஒருவர் வெளி நாட்டுக்குச் சென்றிருந்தபோது—சென்ற இடத்தில் இக்கெவுளிசொல்லில்-அது தனக்குரியதாயின்—தன்னூரில் மழை பெய்யுமெனச் சொல்லுவதா?—தான் அப்போது இருந்த வூரில் பெய்யு மெனச் சொல்லுவதா? எனின், தான் அப்போது இருந்த வூரில் பெய்யு மெனச் சொல்லல் வேண்டு மென்பதாம். சொற்ப மழை பெய்யுமா? அதிக மழை பெய்யுமா? என்பதை எங்ஙனம் அறிவது எனின், கெவுளி சொல்லும் திடத்தையும் திடக் குறைவையும் நோக்கி முறையே அதிக மழை யெனவும் சொற்ப மழை யெனவும் அறிவாயாக!

46 பசுவின் தயிரும் மதுரம் பொருந்திய நல்ல அவலும் கிடைக்கும். (சுக் - செவ்)

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் ஒரு நாளையிலும் இப்பலன் சித்திக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

சுக்கிரனூடத்தில் செவ்வாய் உதயமாதலால்—வெண்ணிறமும் பழுப்பு நிறமுமான பருகுவன தின்பன இனிமையுள்ளன கிடைக்கும்; அங்ஙனம் கிடைப்பன,

நம் வீட்டில் தயார் செய்தனவா? பிறர் கொண்டு வருவனவா? நாம் சென்ற இடத்தில் கிடைப்பனவா? பணங் கொடுத்து வாங்குவனவா? இனுமாய்க் கிடைப்பனவா? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைவேண்டும். பணங் கொடுத்து வாங்குவன வல்ல, மற்றவைகளில் ஏதேனும் ஒரு வகையால் கிடைப்பன என்றறிக.

47 யௌவன ஸ்திரீயின் அனுபவம் கிடைக்கும். (சுக் - புத)

[இப்பலன் இரவாயினும் பகலாயினும் 1 மாதத்தில் சித்திக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

ஆண் பெண் இருபாலர்க்குமே இப்பலனும் எப்பலனும் பொதுவாகும். ஆகவே இக்கெவுளி ஒரு புருடருக்குச் சொல்லில்—அவருக்கு ஒரு இளம் பெண்ணின் சுகம் கிட்டுமெனவும், ஒரு மடவார்க்குச் சொல்லில் அவட்கு ஓர் விடபுருடனின் சுகம் எய்து மெனவும் கொள்ளல் வேண்டும். இவ்வநுபவம் சொந்தப் புருடர் மனைவியர்களுக்குள் நெறிமுறையில் நேரும் அநுபவமா? பரபுருடர் பிறமாதர்களுக்குள் நிகழும் நெறி நீங்கிய அநுபவமா? எனின், நெறி நீங்கிய அநுபவமே யாகுமென்க. அங்ஙனமாயின் - இன்பம் அநுபவித்திற்கியலாத வயோதிகர், இன்ப அநுபவ இச்சை நீங்கிய துறவிகள், பிறமாதரை கனவிலும் நினையா உத்தம இல்லற ஆடவர், நித்திய பிரமசாரிகள், கற்புடை மங்கையர், பருவ மடையாச் சிறுவர் சிறுமிகள் இவர்கட்கு இப்பலன் எங்ஙனம் பொருந்தும்? எனின், அச்சிறப்புடைய ஆண்பாலர்க்குப் பெண் தெய்வ அனுக்கிரகமும், பெண் பாலார்க்கு ஆண்தெய்வ அனுக்கிரகமும், சொற்பனத் தோற்றமும், சொற்பன அநுபவமும் சித்திக்குமென்க.

48 சதுர் வேதங்களையு முணர்ந்தோன் முன்னுக வருவான். (சுக் - குரு)

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் இப்பலன் நடக்குமென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

வேத முணர்ந்தோன் அநேகமாய் பிராமணனு யிருப்பன், மற்ற வருணத்தரா யிருப்பினும் இருக்கலாம். ஆயினும் - கல்வி வாணர்கள், புலவோர்கள், பண்டிதர்கள், படிப்பாளிகள், வித்வான்கள், உபாத்தியாயர்கள், மகோமகோபாத்தியாயர்கள், பிரசங்கிகள், வேதாந்திகள், வேத பிராமணர்கள், சாதுக்கள், மகாத்மாக்கள், என்னும் பெரிய கல்வி முதிர்ச்சி யுடைய வகையார்களில் யாரேனும் ஒருவர் சந்திப்பர் என்பது இப்பலனின் அநுபவம்.

49 சத்துருக்களால் கலகம் உண்டாகும். (சனி - சனி)

[கெவுளி சொல்லியது பகலாகில் இப்பலன் 8 நாளையிலும், இரவாகில் 6 மாதத்திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

இப்பலனுக் குரியார் யாரோ அவருக்கு விரோதமாக அவருடைய பகைவர்கள் கலகஞ் செய்வார்கள் என்பதாம்.

50 ஒரு மரணச் செய்தி எட்டும், அல்லது மரண அழுகை கேட்கப்படும்; நிச்சயமாக அக்கினி பயமுண்டாகும். (சனி - இராகு.

[கெவுளி சொல்லியது பகலாகில் 10 அல்லது 25 நாளையிலும், இரவாகில் ஒரு வருஷத்திலும் இப்பலன் நடக்குமென்பதாம். கெவுளி திடமாயும் பல முறையும் சொல்லில், பலன் வெகு சீக்கிரத்தில் நடக்குமெனவும் அறிதல் வேண்டும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

இதில் குறிப்பிட்ட கால வரைக்குள் அக்கினி பயம் தவறுது உண்டாகு மென்பதற்கு அறிகுறியாக - யாரே னும் அயலார் மரணமானுர் என்னுஞ் செய்தி நமக்கு முன்னரே எட்டும், அல்லது மரண அழுகைக் குரலே னும் கேட்கப்படும் என்பது இதன் தாற்பரியார்த்தம். அக்கினி பயம் பல அசந்தர்ப்ப நிகழ்ச்சிகளால் உண் டாதல் உண்டு. அவை யாவருக்கும் தெரிந்தவைகளா யினும் ஞாபகார்த்தமாகச் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடு கின்றேன். வீட்டில் தொங்கிக் கொண்டிருக்கும் துணி களுக்குங் கீழாக மறதியாய் விளக்குகளை வைத்தலால் துணிகள் நெருப்புப் பிடித்துக் கொண்டு ஆபத்தை விளைத்தலுண்டு. கூரை வீட்டுத் தாழ்வாரங்களின் கீழ் அடுப்பு மூட்டுவதால் நெருப்பு கூரைக்கு எட்டித் தீப்பிடித்து நஷ்டத்தை விளைத்தலுண்டு. சிறுவர்கள் விளக்கோரமாய் விளையாடித் துணிகளில் நெருப்புப் பிடிக்கக் கஷ்டத்திற்குள்ளாவதுண்டு. குளிர் காலத்தில் கிராமச் சிறுவர்கள் வைக்கோல்களைக் கொண்டு தீ மூட்டி குளிர் காயும்போது, தீ காற்றின் வயப்பட்டுத் துணி களில் பிடித்தோ, வீட்டுக் கூரைகளில் பிடித்தோ, வைக்கோல் குவியல்களில் பிடித்தோ அதனுல் ஆபத்து விளைதலுண்டு. நெருப்புப் பெட்டிகள் ஒன்றிலொன்று உராய்ந்து தீப் பிடித்தலுண்டு. சீமை எண்ணெய் (Kerosene Oil) விளக்குகள் பழுது பட்டிருந்து குபீ ரென்று தீப்பிடித்துத் தொந்தரை விளைத்தலுண்டு.சீமை எண்ணெய் டின்னை நெருப்புக்கொண்டு திறத்தலால் ஆபத்து விளைதலுண்டு. வெடிமருந்து, துப்பாக்கி மருந்துகள் தயார் செய்கின்ற இடத்தில் பல அசந்தர்ப் பங்களால் தீப்பிடித்து உயிர்ச் சேதத்தையும் விளைத்த லுண்டு. இப்பலனுக் குரியார் யாரோ அவர் இவைகளை யெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எவ்வகையி னும் தவறுதல் வாராவண்ணம் பார்த்துக் கொள்ளுவா

ராக! போலீஸ் அதிகாரிகள் கிராம முனிசீப்புகள் - கொடிய வெய்யிற்காலம் பெருங் காற்றடி காலங்களில் கூரை வீடுகளால் நிறைந்த கிராமங்களில் பறையடித்து அவரவர்கள் தண்ணீர் மிடாக்களில் நீர் நிறைத்து வைத்துக்கொண்டு எச்சரிக்கையா யிருந்து நலம் பெறும்படிச் செய்யலாம்.

51 நெடிய (நீண்ட) கிழங்கு வரும். (சனி - சூரி)

[இப்பலன் பகலாகில் 6 நாளையிலும், இரவாகில் ஒரு மாதத்திலும் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

கிழங்கு வகைகளில் - உருளைக் கிழங்கு, கருணைக் கிழங்கு போன்ற உருண்டை வடிவமுள்ள கிழங்குகளும், சக்கரவள்ளிக் கிழங்கு, குச்சிவள்ளிக் கிழங்குகள் போன்ற நீண்ட வடிவமுள்ள கிழங்குகளும் ஆகிய இருவகைகள் உள்ளன வாதலின் பேதம் விளங்குமாறு நீண்ட கிழங்கு என்றார். கிழங்கு - பணங் கொடுத்து வாங்குவதால் வருமா? இனமாய் வருமா? எனின், அதை உறுதியாய்ச் சொல்ல இயலாது. அவரவர் நிலைமைக்கும் காலதேச வர்த்தமானங்களுக்கும் பொருந்தும்படி யூகித்துக் கொள்க.

52 கரும்பு, தேன், பழம் வரும். (சனி - சந்தி)

[இப்பலன் பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் $2\frac{1}{4}$ நாளையிலும் நடைபெறு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

இப்பலன் பார்க்கோர் அவருக்கு இதில் குறிப்பிட்ட கால வரைக்குள் கரும்பு தேன் பழம் முதலியனவேனும் அவை போன்ற இனிய தின்பண்டமேனும் எவ்வகையிலாயினும் சித்திக்கு மென்க.

**53** சீழ் பிடித்த புண்ணுடைய ஒருவன் நேராக வருவன். சில மனிதருக்குப் பெரு விலங்குண்டாம். (சனி - செ)

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் இரு நாளையிலும் இப்பலன் நடைபெறு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலன் யாருக்கோ அவரைச் சேர்ந்த சிலருக்கு இராஜ தண்டனை கிடைக்கும். இராஜ தண்டனை நிச்சயமாய்க் கிடைக்கு மென்பதற்கு அறிகுறியாக—முன்னரே புண்ணுடைய ஒருவன் சந்திப்பன் என்பதாம். அதாவது புண்ணுடைய ஒருவனைச் சந்தித்தால்-இராஜ தண்டனை கிடைக்கு மென்பது நிச்சயம் என்பது இதன் பொருள்.

**54** கோடிய களவொன்று ஊராரிடத்துச் சம்பவிக்கும். (சனி - புத)

[இப்பலன் பகலாயினும் இரவாயினும் ஒரு மாதத்தில் சம்பவிக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

15 செ. பலனைப் பார்த்தறிக.

**55** வேத வித்துக்களாகிய பிராமணர் வருவார். அரசர்களாலே சிறையும் கோள் ளையு முண்டாம். (சனி - குரு)

[கெவுளி சொல்லியது பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் 1 மாதத்திலும் இப்பலன் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

அரசர்களாலே சிறையும் கொள்ளையு முண்டு என்பதற்கு அறிகுறியாக பிராமணர் முன்னரே சந்திப்பர் என்பது இதன் பொருள். சிறை என்பது ஜெயில் சிட்சை. அரசர்களால் கொள்ளை என்பதை—ரிவினியூ பாக்கி, கடன் பாக்கி, முதலியவைகட்கு அரசாங்கத்தார்

செய்யும் சொத்து ஜப்தி, நில ஜப்தி, ஏலம் முதலிய வைகளைக் கொள்ளல் வேண்டும், மொகலாய அரசாட்சியில் நிகழ்ந்தன போன்று இக்காலத்தில் நேரான கொள்ளை அரசர்களால் நடைபெறவில்லை; ஆகவே மேற்கண்ட விதமாய் பொருள் கொள்ளத்தக்கதா மென்க.

56 வித்வான்களும், மழையும், நெல்லும் வரத்துண்டு. (சனி - சுக்)

[கெவுளி சொல்லியது பகலாகில் 30 நாளையிலும், இராவாகில் 15 நாளையிலும் இப்பலன் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக் குரியார் யாரோ அவரிடம் வித்வான்கள் வருவர், அவருக்கு நெல் வரும், அவரூரில் மழை பெய்யும் என்பதாம். வித்வான்கள் எதற்காக வருவர்?— எனின், வித்வான்கள் பொதுவாய் அறிவாளிகளிடத்தில் சென்று அவர்களிடத்தில் தாங்கள் கற்ற கல்வி நலத்தையும் பொருள் நயத்தையும் இனிதாய்க்கூறி அவர்கட்கு அச்சுவையை யூட்டித் தாங்களுஞ் சுவைத்து இன்புறுவார்கள். அறிவாளிகள் அவர்களைத் தெய்வமாமெனக் கொண்டு மரியாதை புரிந்து செலவு தந்து அனுப்புவார்கள். கல்விச் சுவை யில்லாதார் அவர்களைப் புறக்கணிப்பர். ஆகவே அவர்களை வரவேற்கவேணும் புறக்கணிக்கவேணும் தயாரா யிருக்கும் பொருட்டு கெவுளி எச்சரிக்கின்றதென்பதாம். மழையைப்பற்றி 45 செ. பலனையும், நெல்லைப்பற்றி 63 செ. பலனையும் பார்த்தறிக.

57 விஷத்தால் சீரைவில் மரணஞ் சம்பவிக்கும். (இராகு-இராகு)

[கெவுளி சொல்லியது பகலாகில் 10 அல்லது 25 நாளையிலும், இராவாகில் 1 வருஷத்திலும் இப்பலன் சம்பவிக்கு மென்க.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

22 நெ. பலனைப் பார்த்து விப...
னும் இப்பலன் அதினிலும் ...
முடையது.

58 பகைவரால் கலகஞ் சம்பவிக்கும்.

[இப்பலன் பகலாகில் 6 நாளையிலும் ...
திலும் நடக்கு மென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள் :—

இப்பலனுக்கு உரியாரிடம் அவர் பகை...
செய்வார்கள் என்பதாம்.

59 ஒரு பெரியவர் இறந்துவிட, மனஞ் ... (
சோர்ந்து கண்ணீர் விடும்படி. ...நவன்
சாவோலை கொண்டுவருவன்.

[இப்பலன் பகலாகில் 9 நாளையிலும், இரவாகில் ...
லும் நிகழும் என்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

பெரியவர் எனின் கல்வியாலாயினும், நிலைமைய...
னும், வயதாலாயினும் பெரியவர் என்றறிக. அ...
சுற்றத்தாரா? அயலாரா? எனின், சுற்றத்தார்
நட்பின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றறிக...
வர்க்க சுற்றத்தாரா யிருப்பினும் இருக்கலாம். ...
செய்தி தபால் மூலமாயேனும் ஆள் மூலமா...
எய்தும் என்றறிக.

60 ஒரு பிராமணன் இறந்தானென்று, மற் (ராகு - செ)
றொரு பிராமணன் வந்து சொல்லுவான்.

[இப்பலன் பகலாகில் 5 நாளையிலும், இரவாகில் ஒரு நாளை
யிலும் நடக்குமென்பதாம்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இது இப்பலனுக்குரியாரின் காதுக்கு எட்டக்கூடிய ஒரு.
பொதுச் சம்பவச் செய்தி. இதனால் அவருக்குப் பாத
கம் ஒன்றுமில்லை.

செய்யும் ெ...
வைகளெ ...நகரத்துள் களவுபோகும்; (ராகு - புத)
சியில் நிக...
கொள்ளை ...ாதத்திற்குள் நடக்கும்.]
மேற்க... கு...ப்புகள்:—
மென் ...க்குரியார் யாரோ அவர் வீட்டிற்கு யாரேனும்
...வருவர் என்பதாம்.

56 வித்... ...ருமாய் 15 கெ. பலனைப் பார்க்க.
வ...
[...சம்பவிக்கும். (இராகு - குரு)
...கில் இப்பலன் 5 நாளையிலும், இரவாகில் 1 மாதத்தி
...ம் நடக்கும்.]

சந்தே... நிவர்த்திக் குறிப்புகள்:—
இப்பலனுக்குரியார் யாரோ அவருக்கு இராஜ தண்டனை கிடைக்கும். மந்திரப் பண்டிதர்களாகிய பிராமணர் களை வைத்துக் கொண்டு ருத்ர ஜெபம் செய்தால் இப் பலனின் கொடுமை சாந்தமாகும் என்ப.

... புதிய நெல் வரும். ...ராந்தரீக விசாரணை (இராகு - சுக்)
நடக்கும். மையினால் விஷந்தீரும்.
[இப்பலன் பகலாகில் 30 நாளையிலும், இரவாகில் 15 நாளையி லும் நடக்குமென்பதாம்.]

...தக நிவர்த்திக் குறிப்புகள்:—
“ புதிய நெல் வரும் ” என்றால் - இனாமாய் வருமா? விலைக்கு வருமா? சொந்த நிலத்தினின்று விளைந்து வருமா? எவ்விதம் வரும் எனின்? புரோகிதர், ஆண்டி, பண்டாரம், இச்சையுள்ள உத்தியோகஸ்தர் போன்றவர் கட்கு இனாமாய் வருமெனவும், இச்சை யில்லா வுத்தி யோகஸ்தர், விலைக்கு வாங்கி யுண்போர் போன்றவர்கட்கு விலைக்கு வருமெனவும், வேளாண்மை செய்வோர்க்கு சொந்த நிலத்தினின்று விளைந்து வருமெனவும், கடன் கேட்டோர்க்குக் கடனாக நெல் வருமெனவும், கடன் கொடுத்தோர்க்குக் கடன் வாங்கியவர் திருப்பிக் கொடுத்

தலால் வருமெனவும், வியாபாரிகட்கு வியாபாரத்திற்கு நெல் வருமெனவும் இவ்விதமாக அவரவர் நிலைமைக்கும் தொழிலுக்கும் தன்மைக்குந்தக திரித்துப் பொருள் கொள்க.

“மாந்தரீக விசாரணை நடக்கும்” என்பது மந்திரங்களை யந்திரங்களில் அமைக்கும் விதமும், ஜெபிக்கும் விதமும், அதற்கு வேண்டியன பலவும் கற்றுக் கொள்ள நேரும் என்பதாம்.

“மையினால் விஷந் தீரும்” என்பது தேள்கடி, பாம்புக்கடி போன்ற விஷக்கடி ஏதேனும் நேரும்; அது மருந்தினால் சொஸ்தமாய் விடும் என்பதாம்.

64 சத்துருக்கள் கூடி பேச்சுப் பேசுவார்கள் (இராகு - சனி)
அதனால் கலகம் ஒன்றுமில்லை.

[இப்பலன் கெவுளி சொல்லியது பகலாகில் 8 நாளையிலும், இரவாகில் 6 மாதத்திலும் நடக்கும்.]

சந்தேக நிவர்த்திக் குறிப்புகள்:—

இப்பலனுக்கு உரியார் யாரோ அவரைப் பற்றி கெடுதியான பேச்சுகள் ஏதேனும் அவருடைய விரோதிகள் ஒன்று சேர்ந்து பேசுவார்கள். அதனால் பாதகம் ஒன்றும் விளையாது என்றறிக.

திருச்சிற்றம்பலம்.

